வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.07.2023 புதன்கிழமை | இதழ் : 222 | பக்கங்கள் : 15




# 13ஐ முழுமையாக தரவே முடியாது!

## கைவிரித்தார் ஜனாதிபதி

- பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாது - ஜனாதிபதி
- 13 மைனஸ் எமக்கு வேண்டாம் - தமிழ் கட்சிகள்!

கொழும்பு, ஜூலை 19

13ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தின் அனுமதியின்றி முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கமுடியாது. அத்துடன், சில விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே இருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசிய கட்சிகளிடம் தெரிவித்துள்ளார்.

15



## புதிய பயங்கரவாத சட்டம் விரைவில் பாராளுமன்றுக்கு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 19

புதிய பயங்கரவாத திருத்தச் சட்டத்தை உரிய திருத்தங்களுடன் விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசிய கட்சிகளுடனான சந்திப்பிலேயே அவர் இந்த

15

குருந்தூர்மலை விவகாரம்:

## பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கைக்கு உறுதி!

கொழும்பு, ஜூலை 19

குருந்தூர்மலையில் கடந்த 14ஆம் திகதி பொங்கலை தடுத்து குழப்பம் ஏற்படுத்தியவர்களுக்கு உடந்தையாக செயல்பட்ட - இந்த செயலை தடுத்து நிறுத்தாத மூத்த பொலிஸ் அதிகாரிமீது நடவடிக்கை எடுப்ப தாக ஜனாதிபதி ரணில்

15



## எங்களை தொடர்ந்து ஏமாற்ற முயலாதீர்கள்!

### சந்திப்பில் சம்பந்தன் சீற்றம்

கொழும்பு, ஜூலை 19

"எங்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள்", என்று இரா. சம்பந்தன் எம். பி. நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடும்

15

## பேச விரும்பாவிடின் எழுந்து செல்லலாம்!

### சம்பந்தனிடம் பாய்ந்த ரணில்

கொழும்பு, ஜூலை 19

"பேச விரும்பினால் மட்டும் என்னுடன் பேசுங்கள். இல்லையேல் நீங்கள் எழுந்து செல்லலாம்", என்று இரா. சம்பந்தன் எம். பியிடம் நேற்றைய சந்திப்பில் தனது கோபத்தை வெளிப்படுத்தினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தமிழ்க் கட்சிகளுடனான நேற்றைய சந்திப்பில் "எங்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள். அதிகாரப் பகிர்வு குறித்து முதலில்

15

## இந்தியா அழுத்தம் தந்தால் இராஜதந்திர ரீதியில் பதில்!

### தமிழ் கட்சிகளின் இந்திய பிரதமருக்கான கடிதம் குறித்து பந்துல இப்படி சொல்கிறார்

கொழும்பு,ஜூலை 19

தமிழ் கட்சிகளின் கடிதங்கள் விடயத்தில் இந்திய அரசாங்கம் அழுத்தம் வழங்கினால் இராஜதந்திர ரீதியிலான பதிலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்குவார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், காத்மண்டு விமான நிலையத்தில் சிறீலங்கன் விமான சேவை விமானங்களுக்கான

15

## பெற்றோல் குண்டு வீச்சில் குடும்பப் பெண் படுகாயம்!

### அச்சுவேலியில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

குழு ஒன்று நடத்திய பெற்றோல் குண்டுவீச்சில் குடும்ப பெண் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 9.20 மணியளவில் அச்சுவேலி - பத்தமேனி பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகத்தை துணியால் மறைத்த வாறு இரண்டு

15

## கோதுமை மா ரூ.10 குறைந்தது

கொழும்பு,ஜூலை 19

கோதுமை மாவின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா உற்பத்தியாளர்களான செரண்டிப் மற்றும் பிறிமா ஆகிய நிறுவனங்கள்

15

## அரசியல் கைதிகள் இருவர் விடுதலை!

கொழும்பு, ஜூலை 19

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் இருவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்தது.

சண்முகரட்ணம் சண்முகராஜன், செல்லையா நவரட்ணம் ஆகியோரே நேற்று மாலை சிறைகளிலிருந்து இவ்வாறு விடுதலை

15

## யாழ். பல்கலையின் பட்டமளிப்பு இன்று!

யாழ்ப்பாணம்,ஜூலை 19

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி வெள்ளிக்கிழமை வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எட்டு அமர்வுகளாக இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

15



## டலஸே ஜனாதிபதி வேட்பாளர்!

கொழும்பு, ஜூலை 19

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்த சுதந்திர மக்கள் சபை தீர்மானித்துள்ளது.

இந்த முடிவை ஆதரிக்கும் எவருடனும் கூட்டணி அமைக்க சுதந்திர மக்கள் சபை தயாராகி வருவதாகவும் இது குறித்து எதிர்வரும் காலங்களில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்த தயார் எனவும்

15

# போருக்கு பின்னான தமிழ் தேசிய அரசியலில் கலை, இலக்கியம் பற்றிய சிந்தனை இல்லை

## ஐங்கரநேசன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரான தமிழர் அரசியலில் விடுதலைப் புலிகளின் காலத்திலேயே தமிழ் இனத்தின் பண்பாடு குறித்தும் கலை, இலக்கியங்கள் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதற்கென கலை, பண்பாட்டுக் கழகம் என்று தனியான ஓர் அலகே உருவாக்கப்பட்டது. போராளிகளிடம் மாத்திரமல்லாமல் தமிழ் பண்பாடு குறித்த உணர்வுபூர்வமான பிரக்ஞை மக்களிடமும் ஏற்படுத்தப்பட்டது. தென்னிலங்கையிலும் தமிழ் - சிங்கள கலைக்கூடல் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், முள்ளிவாய்க்கால் யுத்தத்துக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் கலை, இலக்கியம், பண்பாடு பற்றிய சிந்தனை இல்லாமல் போய்விட்டது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அராலியில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

மேலும், ஆடிப்பிறப்பு தமிழ் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்ற ஒரு பண்டிகை. பன்மைத்துவம் மிக்க ஆரோக்கிய உணவை கூடிப்பகிர்ந்துண்ணும் உணவுப் பண்பாட்டை எடுத்தியம்புகின்ற ஆடிப்பிறப்பு நாளில் பாடசாலைகளில் விடுமுறை வழங்கிய காலம் ஒன்றிருந்தது. ஆனால், இன்று "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்று பாடிய சோமசுந்தரப் புலவரின் பாடல் மாத்திரம் தான் மிஞ்சியுள்ளது. பண்பாட்டு செயல்பாடுகளுக்காகத் தனியார் கல்வி நிறுவனங்களிடம் விடுமுறையைக் கோருகின்ற நாம் பாடசாலைகளில் ஆடிப்பிறப்புக்கான விடுமுறையை மீளப் பெறுவதற்கும் முன்வரவேண்டும்.

சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தாலும் உலகமயமாக்கலாலும் ஒருபுறம் தமிழ்ப் பண் பாடு சிதைக்கப்பட்டுக் கொண் டிருக்கிறது. இன்னொருபுறம் தமிழ் மக்களினது உதாசீனத் தாலும் தமிழ்ப் பண்பாடு அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேடைகளில் தமிழ்த் தேசியம் குறித்து முழங்கும் எங்களது அரசியல் கட்சிகள் எதுவும் தேசியத்தில் பண்பாட்டின் வகிபாகம் குறித்துக் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. பண்பாட்டை உள்வாங்காத தேசியம் ஒருபோதும் முழுமை பெறாது. அது உள்ளீடற்ற கொழுக்கட்டை போன்றதே என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசியம் பற்றி அரசியல்வாதிகள் அதிகம் பேசினாலும் அது மக்களிடம்தான் உள்ளது. மக்களே அதனை அடைகாக்கிறார்கள். ஓர் இனத்தை மற்றைய இனங்களிடமிருந்து வேறுபிரித்துக்காட்டும் தனித்துவமான வாழ்வியல் முறைமையே தேசியமாகும். இதில் முள்ளெலும்பு போன்று பண்பாடு வகிக்கும் பாத்திரம் பிரதானமானது. இதனாலேயே ஓர் இனத்தை அழிக்க நினைப்பவர்கள் முதலில் பண்பாட்டைச் சிதைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். இதனை எதிர்கொள்வதற்கு நாம் கலை, இலக்கிய, பண்பாட்டு செயல்பாடுகளை அரசியலுடன் சேர்த்து ஒரு பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஐ)

## கிளிநொச்சி மருத்துவமனையின்

# பிரசவ அறையின் குளிரூட்டி பழுது; கர்ப்பவதி தாய்மார் பெரும்சிரமம்

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பிரசவ அறையின் குளிரூட்டி பழுதடைந்துள்ளது. இதனால், பிரசவத்துக்காக செல்லும் கர்ப்பவதித் தாய்மார்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒரு வாரத்துக்கும் மேலாக இந்த குளிரூட்டி பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் மகப்பேற்றுக்காக சென்று பிரசவத்துக்காக தங்கியிருக்கும் தாய்மார் பெரும் கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர்.

முல்லைத்தீவு, மல்லாவி, மாங்குளம், நட்டாங்கண் டல் ஆகிய மருத்துவமனை களில் இருந்தும் விசுவமடு, உடையார்கட்டு, தருமபுரம் ஆகிய பகுதிகளிலும் உள்ள கர்ப்பவதித் தாய்மார்கள் பிரசவத்துக்காக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவ மனைக்கே வருகின்றனர்.

இந்நிலையில் மாவட்ட பொது மருத்துவமனையின் மகப்பேற்று அறையின் குளிரூட்டி வசதி முற்றாக செயலிழந்த நிலையில் பிரசவத்துக்காக காத்திருக்கின்ற தாய்மார்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, அதனை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தேசிய மாணவ சிப்பாய்கள் படையணி 20ஆவது படைப் பிரிவின் படையணி தினத்தை முன்னிட்டு நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள படையணியின் தலைமையகத்தில் இந்த இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

# மே 9 சொத்துக்களை பறி கொடுத்த அரசியல்வாதிகளுக்கு நிதி இழப்பீடு

கொழும்பு, ஜூலை 19

இலங்கையில் மக்கள் போராட்டம் நடைபெற்ற கடந்த ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி திட்டமிட்ட சிலரால் நாடு முழுவதும் அரசியல்வாதிகளுக்கு சொந்தமான வீடுகள்,சொத்துக்கள் தீ வைத்து அழிக்கப்பட்டமைக்காக நிதி இழப்பீடுகளைச் செலுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அழிக்கப்பட்ட சொத்துக்களில் அசையா சொத்துக்களுக்காக ஆரம்ப கட்டத்தின் கீழ் நிதி இழப்பீடுகள் வழங்கப்படுவது ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இதனடிப்படையில் அசையா சொத்துக்களுக் கான இழப்பீடாக அண்மையில் 15 அரசியல்வாதிகளுக்கு நிதி இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீடுகள் மற்றும் சொத்துக்கள் அழிந்த 72 அரசியல்வாதிகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

அழிவடைந்த வீடுகள் மற்றும் பொருட்களின் பெறுமதியை மதிப்பீடு செய்ய விசேட குழுக்கள் சிலவற்றை அரசாங்கம் நியமித்துள்ளதாக தெரிய வருகிறது.

இந்த குழுக்கள் ஏற்கனவே அரசாங்கத்திடம் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கியுள்ளன.

அழிவடைந்த சொத்து மதிப்பதை மதிப்பீடு செய்யும் போது சில அரசியல்வாதிகள் பெறு மதியை விட மேலதிக விலைகளை முன்வைத்துள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. முதல் கட்ட டமாக அழிவடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களுக்காக இழப்பீடுகள் வழங்கப்பட உள்ளதுடன் இரண்டாம் கட்டமாக வாகனங்கள், பொருட்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட உள்ளன.

இதனிடையே சில அரசியல்வாதிகள் தமது சொத்துக்கள் அழிந்தமை சம்பந்தமாக பெருந்தொகையான காப்புறுதி பணத்தை பெற்றுக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை அழிவடைந்த தனது சொத்துக்களுக்காக இது வரை இழப்பீடுகள் கிடைக்கவில்லை எனவும் சிலருக்கு இழப்பீடு கிடைத்துள்ளதாகவும் ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார். (அ)

# மன்னாரில் முதியோருக்கு விசேட மருத்துவ முகாம்

மன்னார், ஜூலை 19

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியமடு மேற்கு, பெரியமடு கிழக்கு, காய நகர், ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளில் மருத்துவத் தேவைகளை நிறைவேற்ற முடியாத 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் நலன் கருதி விசேட மருத்துவ முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் முதியவர்களுக்கான விசேட செயற்திட்டங்களை டெவ்லிங் நிறுவனம் நடத்தி வருகிறது. அந்த வகையில் குறித்த இலவச மருத்துவ முகாம் மன்னார் ஈச்சளவக்கை பாடசாலையில் இடம் பெற்றது.

குறித்த மருத்துவ முகாமின் ஆரம்ப நிகழ்வில் அருட்தந்தையர்கள், டெவ்லிங் நிறுவன மாவட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், வைத்தியர்கள், தாதியர்கள், இயன் மருத்துவர்கள், பொது சுகாதார பரிசோதகர் உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 180 மேற்பட்ட முதியவர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட முதியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை உட்பட சக்கர நாற்காலி, ஊன்றுகோல் வழங்கப்பட்டதுடன் கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டன. (அ)

# 'உயிர்த்தெழும் பூமி வேளாண்மை' இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை!

வடமராட்சி, ஜூலை18

உயிர்த்தெழும் பூமி வேளாண்மை என்னும் தொனிப் பொருளில் திரு நெல்வேலியில் உள்ள யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இருநாள் தொழில்நுட்ப பயிற்சி பட்டறை நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்ட றை இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் திருமதி. சிறீ ரங்கன் அஞ்சன தேவி பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தலைமையில் ஆளவாழ்தல் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறைக்கு வளவாளராக இந்திய விவசாய ஆர்வலரும் 60இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நேரடியாக விவசாயம் தொடர்பான களவிஜயம் மேற்கொண்டதுடன் பல சர்வதேச பல்கலைகழகங்களில் சூழல் நேயமான நிலைபேறான விவசாய செயல்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளை மேற் கொண்டு வருபவருமான திருமதி மாரிமுத்து ரேவதி அம்மையார் பங்கேற்று செயன்முறையுடன் கூடிய பயிற்சிகயை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தப் பயிற்சி பட்டறையில் மண்ணைப் புதுப்பித்தல், நீர் முகாமைத்துவம், வினைத்திறனான சக்தியி பயன்பாடு. பயிர் முகாமைத்துவம், அறுவடையும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள், சந்தை முகாமைத்துவம் என பலகோணங்களில் புத்துயிர்ப் பூட்டும் விவசாயக் கருத்துகளை விவசாய ஆர்வலர்களுக்கு வழங்கவுள்ளார். (ஐ -02)

# வறிய மாணவர்களுக்கு இலவச பருவகால சீட்டு

## சபையில் கூறினார் அமைச்சர் பந்துல



கொழும்பு, ஜூலை 19

ஏழைப் பிள்ளைகளுக்கு பணமில்லாமல் இலவச பருவ கால சீட்டுக்களை வழங்குவதாக போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கின்ஸ் நெல்சன் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே பந்துல குணவர்த்தன இவ்வாறு கூறினார்.

மாணவர் பருவகாலச் சீட்டுக் கட்டணத்தில் 9 வீதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இப்போது 30 வீதம் வரை வசூலிக்கப்படும் என்ற கதை இருக்கிறதா என்று கின்ஸ் நெல்சன் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பந்துல குணவர்தன, அரசிடமிருந்து பெறப்படும் பெருந்தொகையான மானியத்தின் அடிப்படையிலேயே கல்விக்கடன் அமுல்படுத்தப்பட்டு வருடத்திற்கு இரண்டு பில்லியன் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால் நிதி நெருக்கடி காரணமாக திறைசேரியால் அந்தப் பணத்தை வழங்க முடியாது.

மாணவர் பஸ் சேவையை இயக்குவதில் போக்குவரத்து சபைக்கும் தனியார் துறைக்கும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பருவகால சீட்டுகளுக்கு அதிக மானியம் வழங்கும்போது, பஸ்களின் எண்ணிக்கை குறையும்.

எனவே இது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
19.07.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிவில் சமூகத்தின் வரலாற்று பணி

சிவில் சமூகத்துக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலுள்ள அடிப்படையான வேறுபாடு என்ன? அரசியல் கட்சிகள் என்பவற்றின் பிரதான இலக்கு அடுத்த தேர்தலாகவே இருக்கும் - தேர்தல் நலன்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாதென்னும் அடிப்படையிலேயே அரசியல் கட்சிகள் ஒவ்வொரு முடிவுகளையும் மேற்கொள்ளும். யதார்த்த பூர்வமாக விடயங்களை விளங்கிக்கொள்ளும் அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள்கூட, தேர்தல் ஒன்று வருகின்றபோது தங்களைத் தீவிரமானவர்களாகவே காண்பித்துக் கொள்கின்றனர். இதன் காரணமாகவே தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு எப்போதும் சாத்தியமற்ற - முன்னர் தோல்வி அனுபவங்களை தந்த அரசியல் சுலோகங்களோடு மட்டுமே பயணம் செய்து கொண்டிருக்கின்றது.

ஆனால், சிவில் சமூகம் மக்களின் நலன்களை மட்டுமே கருத்தில் கொள்ளும் அதற்கேற்ப காலத்துக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை - நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும். அதற்கேற்றவாறான செயல்பாடுகளை முன்னெடுக்கும். ஏனெனில், சிவில் சமூகத்துக்கு குறுகிய நோக்கங்கள் இல்லை. அப்படியிருந்தால் அது சிவில் சமூகமல்ல. இங்கு சிவில் சமூகம் என்பதால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு குழு அல்லது குழுக்களின் கூட்டே கருத்தில் கொள்ளப்படுகின்றது.

யுத்தம் நிறைவுற்று பதினான்கு வருடங்களாகிவிட்டன. இந்தக் காலத்தில் கட்சிகள் அதிகரித்ததே தவிர, மக்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியவாறான குறிப்பிட்டு சொல்லக்கூடிய விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் வெறும் சுலோகங்களை மட்டும் முன்வைத்துக் கொண்டிருக்கும் சூழல்தான் தொடர்கின்றது. இந்த நிலையில் சிவில் சமூக அமைப்புகளும் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ள புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் என்போரும் - கட்சிகள் உயர்த்திப் பிடிக்கும் சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருப்பது சரியா அல்லது இன்றைய சூழலில் எது சாத்தியமோ அதனை அழுத்தம் திருத்தமாக முன்வைப்பதும் அதனை நோக்கி செயல்படுவதும் முக்கியமானதா?

ஏனெனில், கடந்த காலத்தை எடுத்து நோக்கினால் ஒரு விடயத்தை பார்க்கலாம். அதாவது, வாய்ப்புகள் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் தமிழர் அரசியல் தரப்புகள் கையாளத் தவறியிருக்கின்றன. ஒரு விடயத்தில் எப்போதும் தெளிவாக இருக்க வேண்டும். அதாவது, சிங்கள ஆட்சியாளர்கள் தாங்களாக எந்தவொரு விடயத்தையும் செய்யப் போவதில்லை. அவர்கள் அவ்வாறு செய்திருப்பார்களென்றால் வெளியாரின் தலையீடு இலங்கைத் தீவில் ஒருபோதும் ஏற்பட்டிருக்காது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்றிருக்காது. நோர்வேயின் தலையீடு ஏற்பட்டிருக்காது. இந்தப் பின்னணியில் அரசியல் சூழ்நிலை மாற்றங்களால் கிடைக்கும் வாய்ப்புகளை சரியாக புரிந்து கொண்டு செயல்பட வேண்டிய பொறுப்பு நமது கட்சிகள் என்போருக்குரியதாகும். அது மற்றவர்களுக்குரியதல்ல.

2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சில வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றன. அரசியலமைப்பில் இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக்கொண்டு ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட அதிகாரங்களை முழுமையாகப் பெறுவதற்கான சூழலும் உருவாகியது. ஆனால், அந்த வாய்ப்பு தவறவிடப்பட்டது. இந்தப் பின்புலத்தில், தற்போது மீண்டுமொரு வாய்ப்பான சூழல் உருவாகி வருகின்றது. இதனையாவது கட்சிகள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கட்சிகள் தவறினால் இதனை சிவில் சமூகமும் மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்கும் புத்திஜீவிகளும் மதத் தலைவர்களும் தங்களின் பொறுப்பாக்கிக்கொள்ள வேண்டும். உண்மைகளை உரத்துக் கூறுவது அனைத்துப் பணிகளுக்கும் முதன்மையானது.

## யாழ். நகரில் மூன்று நாட்கள் டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஜுலை 19*

அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் நாளை வியாழக்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை மூன்று தினங்களும் விசேட டெங்கு நோய் கட்டுப்பாட்டு நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஜே -73, ஜே - 74 ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வில் வீடுகள் மற்றும் சுற்றாடல்களில் நீர் தேங்கி நின்று நுளம்புக்குடம்பிகள் உருவாகும் ஏதுக்களை யாழ். மாநகர சபையின் கழிவகற்றும் வாகனம் மூலம் அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த செயல்திட்டத்துக்கு அனைத்துப் பொது மக்கள், பொது அமைப்புகள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு இந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே. பத்மகுமார் கேட்டுள்ளார். (ஐ-ரி)

## அண்ணா ஸ்ரார் அணிக்கு சீருடை, உபகரணம் அன்பளிப்பு



*வடமராட்சி, ஜுலை 19*

கோப்பாய் தேசோதய சபையால் உரும்பிராய் கிழக்கு ஜெயபுரம் அண்ணா ஸ்ரார் உதைபந்தாட்ட அணிக்கு தேவையான விளையாட்டு சீருடைகள், மற்றும் விளையாட்டு உப கரணம் என்பன வழங்கப்பட்டன.

கோப்பாய் தேசோதய சபைத் தலைவர் இ. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் தேசோதய சபை உறுப்பினர்களும் சமுக செயல்பாட்டாளருமான தே. றமணதாசன், சமாதான நீதவான் சா. தவசங்கரி ஆகியோர் கலந்து கொண்டு சீருடைகள் மற்றும் உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

இதற்கான நிதியை நெதர்லாந்தில் வசிக்கும் மு. லலிதா நன்கொடையாக வழங்கினார். இதேவேளை உரும்பிராய் கிழக்கில் பாரிசவாத நோயால் பாதிக்கபட்ட முதியவர் ஒருவருக்கு நான்கு சக்கர நடைவண்டில் ஒன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டது. (ஐ-02)

## வாராந்த சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜுலை 19*

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப் புலவர் ச. நவநீதன் “பெரிய புராணம் ஓர் வாழ்வியல் வழிகாட்டி” என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## பெருந்திருவிழா

*யாழ்ப்பாணம், ஜுலை 19*

மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் தொடர்ந்து மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (ஐ-ரி)

## பொதுக்கூட்டம்

*கிளிநொச்சி, ஜுலை 19*

பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மத்திய அரசு, மாகாண சபை சார்ந்த சகல முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## தேர்த் திருவிழா

*யாழ்ப்பாணம், ஜுலை 19*


கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்தப் பெருந்திருவிழாவில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். இதன்போது, கோண்டாவில் முனீஸ்வரர் ஆலயத்தில் இருந்து பாற்குடம் எடுத்துவரும் நிகழ்வு இடம்பெறும்.

அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கத் திருவிழா நடைபெறும். (ஐ-ரி)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜூலை - 19 புதன்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 03
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளரிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். கடமை உணர்வுடன் செயல்படும் நாள்.

**விருச்சிகம்**
உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரம் சூடு பிடிக்கும். தலைமையின் ஆதரவு கிட்டும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நல்லது நடக்கும் நாள்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

# ஊழல் வழக்கு உள்ளபோதிலும் எதிர்க்கட்சிகள் தி. மு.கவுக்கு ஆதரவு

## பிரதமர் நரேந்திர மோடி

புதுடில்லி, ஜூலை 19

தமிழ்நாட்டில் ஊழல் வழக்குகள் இருந்த போதும் தி. மு. கவுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு அளிக்கின்றன என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பெங்களூர் கூட்டம் ஊழலை ஊக்குவிக்க கூட்டப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். டில்லி செங்கோட்டையில் மூவர்ணக்கொடி ஏறுவதற்கு முன் அந்தமானில் மூவர்ணக் கொடி ஏறிவிட்டது. ஆனாலும், அடிமைத்தனத்தின் அடையாளங்கள் சில இருந்தன. தீவுகளின் பெயர்களை மாற்றியதன் மூலம் அந்த அடையாளங்களை நாம் நீக்கியுள்ளோம்.

மல்லிகார்ஜுன கார்கே பேச்சு குடும்பத்துக்காக இருந்தது -குடும்பமாக இருக்கிறது - குடும்பத்துக்காக இருப்பது தான் எதிர்க்கட்சிகளின் தாரக மந்திரம். தமிழ்நாட்டில் ஊழல் வழக்குகள் இருந்த போதும் தி. மு. கவுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு அளிக்கின்றன" என்றார். (ஐ)

# உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்று செல்லும் செந்தில்

புதுடில்லி, ஜூலை 19

ஆட்கொணர்வு மனு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக அமைச்சர் செந்தில் பாலாஜி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. 'கைது நடவடிக்கை சட்ட விரோதமானது அல்ல' என்று 3ஆவது நீதிபதி சிவி கார்த்திகேயன் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து செந்தில் பாலாஜி மேல்முறையீடு செய்துள்ளார்.

சட்ட விரோத பணப் பரிமாற்ற வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜியை வருவாய் துறையினர் கடந்த ஜூன் 14ஆம் திகதி கைது செய்தனர். நோய்வாய்ப்பட்ட அவர் சிகிச்சையின் பின்னர் தற்போது நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, உயர் நீதிமன்றத்தில் அவரின் மனைவி தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தார். இந்த வழக்கில், 'செந்தில் பாலாஜியை கைது செய்தது, நீதிமன்ற காவலில் வைத்தது சட்டப்பூர்வமானது' என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து செந்தில் பாலாஜி மேல் முறையீடு செய்துள்ளார். (ஐ)

# வன்னியர் இட ஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்படும்

## பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ்

சென்னை, ஜூலை 19

அடுத்த சில வாரங்களில் வன்னியர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்படும் என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

வன்னியருக்கான இடஒதுக்கீடு சாதாரணமாக கிடைத்து விடவில்லை. தொடர் மறியல் போராட்டம், பொலிஸ் துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதலில் 21 பாட்டாளிகள் உயிரிழந்தது, அதற்குபிறகும் பலர் உயிர் தியாகம் செய்தது ஆகியவற்றுக்கு பிறகே, வன்னியர்கள் உள்ளிட்ட 108 சமூகங்களுக்கு 20 சதவீத இடஒதுக்கீட்டை கடந்த 1989இல் அப்போதைய முதல்வர் கருணாநிதி வழங்கினார்.

வன்னியர்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டிய 20 சதவீத இடஒதுக்கீடு 108 சாதிகளுக்கு இணைத்து வழங்கப்பட்டதால், நமக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லை. அதை சுட்டிக்காட்டியதன் பயனாக, பழனிசாமி தலைமையிலான முந்தைய அதிமுக ஆட்சியில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு வழங்க சட்டம் நிறைவேற்றப்பட்டது. சமூகநீதிக்கு எதிரான சக்திகள் தொடர்ந்த வழக்குகளால் அந்த இடஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டாலும், தரவுகளை திரட்டி வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கடந்த 2022 மார்ச் 31ஆம் திகதி தீர்ப்பளித்தது. ஆனால் இன்னும் புதிய இடஒதுக்கீட்டு சட்டம் நிறைவேற்றப்படவில்லை.

வன்னியர்களும், சமூகநீதி தேவைப்படும் பிற சமுதாயங்களும் இணைந்து நின்று தேர்தலை சந்தித்தால் மிகவும் எளிதாக அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்க முடியும். இந்த உண்மையை நாம் உணரும்போது தான் நமக்கு உண்மையான விடுதலை கிடைக்கும். அந்த வகையில், அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான பா. ம. கவின் முயற்சிக்கு நாம் அனைவரும் படிக்கட்டுகளாக இருந்து உதவ வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# காவிரி நீரை பெற்றுத்தரக் கோரி போராட தயாராகிறது பா. ஜ. க.!

சென்னை, ஜூலை 19

கர்நாடக அரசிடம் இருந்து காவிரி நீரை பெற்றுத்தர தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பா. ஜ. க. சார்பில் வரும் 23ஆம் திகதி அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அந்தக் கட்சியின் கட்சியின் மாநில துணைத் தலைவர் கே. பி. ராமலிங்கம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் அரசு கொடுத்த நம்பிக்கை அடிப்படையில் 100 சதவீதம் பயிரிட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் டெல்டா பகுதிகளுக்கு மட்டும் 9 ஆயிரம் கனஅடி நீர் கல்லணையில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

அவ்வாறு இருந்தால்தான் மழையில்லாதபோதும் விவசாயிகளால் பயிர்களை காப்பாற்ற முடியும். ஆனால் மேட்டூர் அணையில் இருந்து 10 ஆயிரம் கனஅடி நீர் மட்டுமே வெளியேற்றப்பட்டு வருகிறது. அணைக்கான நீர்வரத்து 200 கனஅடி அளவிலே வந்து கொண்டிருக்கிறது.

மேட்டூர் அணையில் தற்போதைய நீர் இருப்பு 36 டி. எம். சியாக உள்ளது. தினசரி 10 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்படும் பட்சத்தில் இருப்பு நீர் குறைந்தபட்சம் 20 நாள்கள் வரையே தாக்குப்பிடிக்கும். நீர் குறைந்து விட்டால் விவசாயத்திற்கு வழங்கப்படும் நீரை நிறுத்திவிட்டு குடிநீர் தேவைக்கு மட்டுமே அணையில் இருந்து வெளியேற்றுவர்.

விவசாயிகளை பாதுகாக்க வேண்டியும் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய காவிரி நீரை முதல்வர் பெற்று தரக்கோரியும் தமிழகம் முழுவதும் வரும் 23ஆம் திகதி அனைத்து ஊராட்சிகளிலும், மாநகராட்சி, நகராட்சியின் அனைத்து தொகுதிகளிலும் பா. ஜ. க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது - என்றார். (ஐ)

# யாழ். மாவட்டத்தில் தாராளமாக போலி சாரதி அனுமதிப்பத்திரம்!

## பொலிஸாரால் நேற்று முன்தினமும் இருவர் கைது

**யாழ்ப்பாணம், ஜுலை 19**

**போலி சாரதி அனுமதிப்பத்திரத்துடன் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினமும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்களிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.**

யாழ்.மாவட்ட விசேட குற்ற விசாரணை பிரிவினரால் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை போலிச் சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்த குற்றச்சாட்டில் இருவர் கைதாகினார். இதனை அடுத்து மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு, பொலிஸார் தகவல் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை போலிச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்க வந்த தெல்லிப்பழையை சேர்ந்த ஒருவர் கைதாகினார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவரும் இன்னொருவருமாக இருவர் போலிச் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் கைதாகினார்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் குறைந்தது 60 பேர் வரையாவது போலிச் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று உள்ளமை தெரிய வந்துள்ளது.

மாவட்ட செயலகத்தில் நடைபெறும் எழுத்துப் பரீட்சைக்கு இரண்டு தடவைகள் தோற்றியும், சித்தியடைய முடியாதவர்களை இலக்கு வைத்து மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள முகவர்கள் ஊடாகவே போலிச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விவாகரத்துடன் தொடர்புடையவர்களை முழுமையாக கைது செய்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதியை பெற்று மேலதிக விசாரணை தொடர்வதற்கும் யாழ்.மாவட்ட செயலகத்தினரின் ஒத்துழைப்புடன் மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்களுடன் விசாரணை முன்னெடுக்கவும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

(அ)

# விபத்தில் ஒருவர் பலி!



கொழும்பு, ஜுலை 19

எல்ல-வெள்ளவாய வீதியின் ரஹதன்கந்த பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த பஸ் பள்ளமொன்றில் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியது. விபத்தில் காயமடைந்த 8 பேர் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவாய பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

(அ)

# ஜனாதிபதி பொது மன்னிப்பை சவாலுக்கு உட்படுத்தமுடியாது

## சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, ஜுலை 19

குற்றவாளி ஒருவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கு நிறைவேற்று ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை அடிப்படை உரிமைகளின் கீழ் சவால் செய்ய முடியாது என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

றோயல் பார்க் கொலைச் சம்பவத்தில் குற்றவாளியான ஜுட் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இதனைத் தெரிவித்தார்.

கிரிமினல் குற்றத்திற்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு ஜனாதிபதி மன்னிப்பை வழங்குவதற்கு நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதிக்கு தனித்துவமான அதிகாரம் உள்ளது என அவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஒருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவது நீதித்துறையில் தலையிடுவது அல்ல எனவும் குறிப்பிட்ட அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை இந்நாட்டு மக்களே நியமிப்பதாகவும், அவர் மக்களின் இறையாண்மையை பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு வழங்குவது அத்தகைய விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகும், மேலும் ஒரு நிர்வாக அல்லது நிர்வாக செயல்முறையின் கீழ் சவால் செய்ய முடியாது என்று கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் குறிப்பிட்டார்.

கிரிமினல் குற்றத்திற்காக மாத்திரமே இந்த ஜனாதிபதி மன்னிப்பை வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

### குருந்தூர்மலை விவகாரம்

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜுலை 19

குருந்தூர்மலையில் சைவ வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமைக்கு எதிராக பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் கடந்த 14 ஆம் திகதி வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டதுடன், ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பிலேயே நேற்று முன் தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன், ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் ஆகியோரால் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குருந்தூர்மலையில் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை, பிரதோச தினத்தில் சைவத் தமிழ் மக்கள் சிலர் விசேட பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றபோது பௌத்த துறவிகள் உள்ளிட்ட குழுவினரால் குழப்பம் விளைவிக்கப்பட்டது.

அத்தோடு பொங்கலுக்காக அங்கு தீ மூட்டப்பட்டபோது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் சப்பாத்து கால்களினால் மிதிக்கப்பட்டு அணைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அங்கு சைவ வழிபாட்டுரிமையைத் தடுக்கும் வகையில் செயற்பட்ட பௌத்த தேரர்கள் உள்ளிட்ட குழுவினருக்கு ஆதரவாகச் செயற்பட்ட அதேவேளை, சைவ வழிபாட்டுரிமைகளைத் தடுக்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

(அ)

# நம்பிக்கையில்லா பிரேரணை அரசை மேலும் பலப்படுத்தும்

## எச்சரிக்கின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜுலை 19

“உரிய ஏற்பாடுகளின்றி சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும்பட்சத்தில் அதன்மூலம் அரசு பலமடையக்கூடும்.” - என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“சுகாதார அமைச்சர் மீது மட்டுமல்ல இந்த அரசுமீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். எதிரணி தமது கடமையை சரிவர நிறைவேற்றாமல், நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அது எதிரணியை பலப்படுத்துவதாகவே அமையும்.

உடல் பலத்தைவிட மூளையாலே வேலை செய்ய வேண்டும்.” - எனவும் கம்மன்பில குறிப்பிட்டார்.

(அ)

# மாணவியை மோசமாக அடித்த அதிபரை உளவள சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜுலை 19

நிதானமிழந்து 9 வயது மாணவியை தாறுமாறாக தாக்கிவிட்டேன் என தீவகம் கல்வி வலயத்துக்குட்பட்ட மண்கும்பான் பகுதியிலுள்ள பாடசாலை அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

9 வயது மாணவியை தாறுமாறாக அடித்து துன்புறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் முற்படுத்தப்பட்டபோது, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எஸ் லோன் பைப்பினால் மாணவியை 20 தடவைகள் தாக்கியதாக அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலனுக்காக மேலதிக வகுப்பு நடத்தியாகவும், அப்போது ஒரே விடயத்தை 3 தடவை சொல்லியும் தவறிழைத்ததால், நிதானமிழந்து மாணவியை தாக்கியதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நிதானமிழப்பதும் ஒரு வகை நோயே. இதற்கு உளவள சிகிச்சை பெறவேண்டுமென அறிவுறுத்திய நீதவான், 5 இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் அதிபரை விடுவித்து, வழக்கை எதிர்வரும் 31ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

இதேவேளை, இந்த பாடசாலையில் கல்வி கற்கும் ஏனைய 9 மாணவிகளுக்கும் அதிபர் அடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# ரணிலை ஆதரிப்பதற்காக விரைவில் மலர்கிறது புதிய மொட்டு கூட்டணி!

## ஒருங்கமைப்பாளராக நிமல் லான்சா

**கொழும்பு, ஜூலை 19**

**பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இணைந்து புதியதொரு அரசியல் கட்சியை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

அரசில் பதவிகளை வகிக்கும் மொட்டு கட்சி உறுப்பினர்களும், மேலும் சில மொட்டு கட்சி உறுப்பினர்களும் இணைந்தே இந்த கட்சியை உருவாக்கவுள்ளனர் என தெரியவருகின்றது.

இதற்கான ஒருங்கமைப்புப் பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மேற்கொண்டுவருகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இருந்த முக்கிய புள்ளி ஒருவருடன் இதன் பின்னணியில் செயற்படுகின்றார் என தகவல் வெளியாகியுள்ளது.

இவர்கள் இருவரும் இணைந்து ராஜகிரிய பிரதேசத்தில் அலுவலகம் ஒன்றை நடத்தி தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நோக்கில் இந்த அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.



(அ)

# உயர்தர விடைத்தாள்கள் மதிப்பீடு 90 வீதம் நிறைவு

கொழும்பு, ஜூலை 19

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் 90 வீதம் நிறைவு பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.


மேற்படி பரீட்சையில் ஆங்கிலமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை எதிர்வரும் 27 ஆம் திகதி நிறைவு பெறும் என்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமான பொறியியல் தொழில்நுட்பம் செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி நிறைவு பெறள்ளதாகவும் 13,000 பரீட்சாத்திகளுக்காக 48 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்துடன் சம்பந்தமான உயிர் பல்வகைமை தொழில்நுட்ப பாடத்திற்கான செயன்முறை பரீட்சை எதிர்வரும் ஐந்தாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை 77 மத்திய நிலையங்களில் நடைபெறும் என்றும் 15,000 பேர் பரீட்சைக்குத் தோற்றுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# நீதிமன்றத்தின் கூரையில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நபர்



கொழும்பு, ஜூலை 19

மல்சிறிபுர பொலிஸாரால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறும் நபர் ஒருவர் நேற்றுக் காலை குருநாகல் நீதிமன்ற கட்டடத் தொகுதியின் கூரையில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

55 வயதுடைய நபர் ஒருவர் மது அருந்திவிட்டு நீதிமன்றத்தின் கூரையில் ஏறியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் மாநகர சபையின் தீயணைப்புத் திணைக்களத்தினருடன் பொலிஸ் உத்தியோகத்தர்களும் அவரைக் கூரையிலிருந்து கீழே இறக்க முற்பட்டதை காணமுடிந்தது.

சட்டவிரோத மதுபான வியாபாரம் தொடர்பில் தமக்கு எதிராக மல்சிறிபுர பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த சம்பவத்தை காண ஏராளமான பொதுமக்கள் நீதிமன்றுக்கு முன்பு திரண்டனர்.

(அ)

# பால் உற்பத்தி அபிவிருத்திக்கு பிரான்ஸ் 250 மில்லியன் ரூபா!

கொழும்பு, ஜூலை 19

நாட்டின் பால் உற்பத்தித்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 250 மில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு பிரான்ஸ் இணங்கியுள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் பிரான்ஸ் முகவர் நிறுவன பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இதற்கான முதற்கட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

நாட்டின் பால் உற்பத்தியை அதிகரித்தல், பாலின் தரத்தை அதிகரித்தல் மற்றும் கறவை பசுக்களை பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

# சிறு போகத்தில் 5 இலட்சம் ஹெக்ரேயரில் நெற்செய்கை!

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் புதிய உரக் கொள்கையின் காரணமாக, 10 வருடங்களின் பின்னர் கடந்த சிறுபோகத்தின்போது 5 இலட்சத்து 12 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக, விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயத்தில் நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட மரக்கறிகள் மற்றும் பழங்களின் உற்பத்தியை அதிகரிக்க முடியும் எனவும், அதன் மூலம் விவசாய பயிர்களின் இறக்குமதியை மட்டுப்படுத்த முடியும் எனவும் விவசாய அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டின் விவசாயத் துறையை சர்வதேச மட்டத்திற்கு மேம்படுத்த முடியும். அதனை செய்வது கடிமான விடயமும் அல்ல.

விவசாயத்துறைக்கு புதிய தொழில்நுட்பத்தை புகுத்தும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு பல தடைகள் வரலாம்.

இருப்பினும் புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக விவசாயத்தை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கக்கூடிய அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும்.

தற்போது நாம் விவசாய சேவைகள் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

அதன் பின்னர் தற்போது விளைவிக்கப்படும் விளைச்சல்களுக்கு மாறாக புதிய விளைச்சல்களை மேற்கொள்ளும்போது சலுகைகளை வழங்க முடியும்.

நெல் விளைச்சலில் இலாபம் ஈட்ட முடியாத பகுதிகளும் உள்ளன. அவர்களுக்கு வேறு விளைச்சல்கள் ஊடாக உதவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இங்கு வேறு விளைச்சலகளை மேற்கொள்ளும் போது அவர்களுக்கு அதிக இலாபம் கிட்டும்.

ஜனாதிபதி இந்நாட்டை பொறுப்பேற்கத் தவறியிருந்தால் விவசாயிகள் விளைச்சல் நிலங்களுக்குச் சென்றிருக்க மாட்டார்கள்.

பலர் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள். அத்தோடு உணவற்ற தேசமாகவும் நாடு மாறியிருக்கும்.

ஒரு வருடத்திற்கு முன்னர் ஜனாதிபதி இந்நாட்டினை பொறுப்பேற்றுக் கொண்ட போது 90 சதவீதமாக காணப்பட்ட உணவுத் தட்டுப்பாடு, தற்போது 4.1 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

நாட்டின் விவசாய துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உணவுத் தேவையை பூர்த்தி செய்த விவசாயிகளுக்கு அனைவரும் நன்றி கூறவேண்டும்.

அத்தோடு விவசாயிகள் மீண்டும் விளைச்சல் செயற்பாடுகளை ஆரம்பித்தமையின் காரணமாக 400 மில்லியன் டொலர்கள் நாட்டில் எஞ்சியுள்ளது.

விவசாயத்தை நவீனமயமாக்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் விவசாய தேவையில் 80 சதவீதத்தினை உள்நாட்டு உற்பத்தியில் இருந்து பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது- என்றார்.

(அ)

# ஜனாதிபதி ரணிலைச் சந்தித்த உலக வங்கி துணைத் தலைவர்

கொழும்பு, ஜூலை 19

உலக வங்கியின் தெற்காசியாவுக்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசருக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.


நாட்டின் பொருளாதார மீட்சிக்கு முக்கியமான தனியார் முதலீட்டை அதிகரிப்பதற்காக கடன் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றின் முன்னேற்றம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட் டுள்ளதாக, உலக வங்கியின் தெற்காசியாவுக்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் தமது உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் மாதங்கள் மிகவும் முக்கியமானவை எனவும் அதற்கு ஆதரவளிப்பதற்கு உலக வங்கி தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உலக வங்கியின் தெற்காசியாவுக்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் உள்ளிட்ட தரப்பினர் தனியார் துறையினருடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும் கொள்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக, உலக வங்கியின் தெற்காசியாவுக்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் தெரிவித்துள்ளார்.

(அ)



# இலவச சுகாதாரத்துறையை வீழ்ச்சியடைய செய்யச் சதி!

## அமைச்சர் கெஹெலிய எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19

**நாட்டின் இலவச சுகாதாரத்துறைமீது திட்டமிட்ட வகையில் தாக்குதல் நடத்தி போலியான பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இது மிகவும் ஆபத்தான போக்காகும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுகாதார அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் குறித்து உரிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விவகாரம் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் அறிக்கை கிடைத்ததும் உரிய பதில்களை வழங்குவோம்.

அதேபோன்று பேராதனை போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பெண்ணின் உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐவர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளேன். இந்தச் சம்பவத்தை வைத்துத்தான் நாடு முழுவதும் தவறான பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அரசாங்கம் தரமற்ற மருந்துகளைக் கொள்வனவு செய்வதாகவும் ஊழல்-மோசடிகள் இடம்பெறுவதாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். பேராதனை வைத்தியசாலையில் செலுத்தப்பட்ட தடுப்பூசியானது 2013ஆம் ஆண்டு முதல் முறையாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தடுப்பூசியானது 20 வருடங்களுக்கு மேலாக நாட்டில் பாவிக்கப்படுகிறது. நாட்டில் கௌரவமிக்க நிறுவனமான "பவர்" நிறுவனம் தான் இந்த மருந்துகளை இறக்குமதி செய்கிறது. இந்நிறுவனம் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

திட்டமிட்டு நாட்டின் இலவச சுகாதாரத்துறை மீது தாக்குதல் நடத்துகின்றனர். குறித்த பெண்ணுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்த தருணத்தில் அவர் தங்கியிருந்த வைத்தியசாலை விடுதியில் 8 பேருக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டிருந்தது. அவர்களுக்கு எவ்வித ஒவ்வாமையும் ஏற்பட்டிருக்கவில்லை.

கடந்த காலத்தில் எரிவாயுக்கள் அடிக்கடி வெடித்தமை தொடர்பில் உங்களுக்கு ஞாபகம் இருக்குமென நினைக்கிறேன்.

கோட்டாபய பதவி விலகியதும் எரிவாயும் எங்கும் வெடிக்கவில்லை என்பதை அனைவரும் அறிந்துக்கொள்ள வேண்டும். இவை அனைத்தும் திட்டமிட்டு நடத்தப்படும் செயல்பாடுகளாகும்-என்றார். (அ)

# ஒருவரை கொலை செய்வதற்கு சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் கைது

கொழும்பு, ஜூலை 19

மத்தேகொட வீடமைப்புத் தொகுதியில் ஒருவரை கொலை செய்யும் நோக்கில், வாள்கள், பொல்லுகளுடன் முச்சக்கர வண்டியில் சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் நடத்திய விசாரணைகளில் மகரகமை, கொட்டாவை, பன்னிப்பிட்டிய, உடுமுல்ல பிரதேசங்களை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் விற்பனை தொடர்பான வலையமைப்பு பற்றி தகவல்கள் கிடைத்துள்ளதாக மத்தேகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தகவலுக்கு அமைய போதைப்பொருள் விற்பனையுடன் தொடர்புடைய கணவன், மனைவியை கைது செய்துள்ள பொலிஸார், அவர்களிடம் இருந்து ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களை கைப்பற்றியுள்ளனர்.

திட்டமிட்டு குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவின் தலைவரான தற்போது டுபாய் நாட்டில் இருக்கும் தனுக என்பவர், அங்கிருந்தவாறு போதைப்பொருள் விற்பனையை வழிநடத்தி வந்துள்ளார்.

மத்தேகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இந்திக குமார வீட்டில் இருந்து பொலிஸ் நிலையததிற்கு செல்லும் வழியில் மத்தேகொட தொடர்மாடி வீடமைப்புத் தொகுதிக்கு அருகில் முச்சக்கர வண்டியில் சந்தேகத்திற்குரிய சிலர் இருப்பதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பொலிஸ் குழுவை வரவழைத்து, சந்தேக நபர்களையும் முச்சக்கர வண்டியையும் சோதனையிட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியில் இரண்டு வாள்கள், கூரிய கத்தி மற்றும் பொல்லுகள் இருந்துள்ளன. இதனையடுத்து எதற்காக இந்த ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டன என சந்தேக நபர்களிடம் விசாரித்தபோது, போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடும் ஒருவரை கொலை செய்ய இவற்றை எடுத்து வந்ததாக கூறியுள்ளனர்.

இதனையடுத்து ஒரே குடும்பத்தை சேர்ந்த உறவினர்களான சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன் பின்னர் மத்தேகொட வீடமைப்புத் தொகுதியில் வசிக்கும் நபருக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளை சோதனையிட்ட பொலிஸார் போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர். (அ)

# மகிந்த-ரணில் இணையமுடியுமாயின் நாங்கள் ஏன் ஒன்றிணையக்கூடாது?

## கேள்வி எழுப்புகிறார் ரில்வின் சில்வா

கொழும்பு, ஜூலை 19

மகிந்த மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து நாட்டை ஆட்சி செய்ய முடியுமாயின் மக்களுக்கு சார்பான அரசாங்கத்தை அமைக்க அனைவரும் ஒரு முகாமுக்குள் ஒன்றிணையவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் நீர் கொழும்பு தொகுதி அதிகார சபைக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனவாதமற்ற மனிதாபிமானத்துடன் ஒரு முகாமைமைய அனைவரும் இணைந்து உருவாக்கவேண்டும்.

அதற்கு தலைமை தாங்க மக்கள்விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.

அடுத்த தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் போது நாட்டை வங்குரோத்து அடைய செய்த அணியா அல்லது நாட்டை கட்டியெழுப்பும் அணியா என்று பார்த்தே வாக்களிப்பார்கள்.

அப்போது பெரும்பான்மையான மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைவார்கள்.

திருடர்கள் கூட்டமான எதிரிகள் அனைவரையும் ஒரிடத்தில் வைத்து அப்போது தோற்கடிக்க முடியும்.

இதன் மூலம் வரலாற்றை புதிதாக எழுதும் தலைமுறையை உருவாக்க முடியும்-என்றார்.

# கெஹலியவுக்கு எதிராக பிரேரணை; சபையில் நேற்று அறிவித்தார் சஜித்

கொழும்பு, ஜூலை 19

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் மற்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட காரணங்களுக்காக அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். (அ)

# தரமற்ற மருந்து இறக்குமதி செய்தோரை சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

"தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து வைத்தியசாலைகளுக்கு விநியோகித்துள்ள ஊழல் வாதிகளுக்கு எதிர்காலத்தில் அமையும் எமது அரசாங்கத்தின் ஊடாக சட்ட நடவடிக்கைகளை எடுப்போம்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிடம் எழுப்பிய கேள்வியின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடுகள், தரமற்ற மருந்துகள் விநியோகம், நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படாமை மற்றும் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படாமையால் பல உயிர்கள் இழக்கப்படுகின்றமையை தினமும் காண்கிறோம்.

சிறிய நோய்களுக்கு சிகிச்சை பெற வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சில மருந்துகளால் அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

உடனடியாக இதுதொடர்பில் அரசாங்கம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வுகளை வழங்க வேண்டும் என்பதுடன், நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் தரமற்ற மருந்துகளை பாவனையிலிருந்து நீக்க வேண்டும்.



வைத்தியக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வீழ்ச்சியடைந்த நாட்டில் தரமற்ற மருந்துகளில் வியாபாரமும் இடம்பெறுகின்றமை வேதனையளிப்பதாகவுள்ளது.

பேராதனை போதனா வைத்தியசாலையில் இரண்டாவது குழந்தையை பிரசுவிக்க அனுமதிக்கப்பட்ட சந்துனி மதுஷானிக்கு சிசேரியன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் போது உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா வைத்தியசாலையில் பத்து பேருக்கு கண் பார்வை குறைப்பாடு ஏற்பட்டுள்ளது.

பேராதனை போதனா வைத்தியசாலையில் மேலும் இரண்டு பெண்கள் ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ளனர்.

ராகமை போதனா வைத்தியசாலையில் தடுப்பூசி செலுத்தப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார். மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு நாடுமுழுவதும் பல்வேறு வைத்தியசாலைகளில் தரமற்ற மருந்துகளின் பாவனையில் பலர் உயிரிழந்து வருகின்றனர்.

நாம் மேற்கொண்டுள்ள பரிசோதனைகளின் ஊடாக, பாவனைக்கு உதவாத மருந்துகள் எனக் கூறப்படுட்டுள்ள மருந்துகள் ஊழல் மோசடிகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையை கண்டறிந்துள்ளோம். வேண்டுமென்றே தரமற்ற மருந்துகளை இவ்வாறு வழங்கி வருகின்றனர்.

சுகாதார அமைச்சர் இந்த மோசமான சுகாதார கட்டமைப்புக்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைவரும் எதிர்காலத்தில் அமையும் எமது அரசாங்கத்தின் கீழ் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்-என்றார். (அ)

# ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மோடி அடிக்கடி பயணிப்பது ஏன்?

பிரான்ஸைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய அரபு அமீரக சுற்றுப் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

ஐக்கிய அரபுடன் சனிக்கிழமை நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு, இந்திய ரூபாய் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் நாணயமான திர்ஹாம் ஆகியவற்றில் வர்த்தகம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக மோடி தெரிவித்தார்.

இருதரப்பு வர்த்தகம் 85 பில்லியனில் இருந்து விரைவில் 100 பில்லியன் டாலராக உயரும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் குறித்த அறிவிப்பு, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான உறவில் புதிய மைல்கல்லாக கருதப்படுகிறது.

கடந்த 2014ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்ற பின்னர் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மோடி மேற்கொண்ட 5-ஆவது பயணம் இதுவாகும்.

கடந்த சில ஆண்டுகளாகவே, இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான உறவில் அதிகம் நேசம் தென்படுகிறது.

கடந்த முறை, மோடி அமீரகம் சென்றபோது, அதிபர் முகமது பின் சயீத் அல்-நஹ்யான் தனது பாதுகாப்பு நெறிமுறைகளை மீறி மோடியை வரவேற்பதற்காக அபுதாபி விமான நிலையத்திற்கே வந்திருந்தார்.

இதேபோல், அமீரகத்தின் உயரிய விருதான ஆர்டர் ஆப் சயாத் விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் இருந்து வரும் பிரதமர் மோடி, வளைகுடா நாடுகளுடன் இந்தியாவின் உறவை வளர்த்துகொள்வதில் கூடுதல் கவனம் செலுத்துகிறார்.

2014ஆம் ஆண்டு மோடி பிரதமரானபோது, 2002ஆம் ஆண்டு நிகழ்ந்த குஜராத் கலவரம் தொடர்பாக அவரது பிம்பம், இந்தியாவுடனான வளைகுடா நாடுகளின் உறவில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆனால், இந்த பிம்பத்துக்கு மாறாக, வளைகுடா நாடுகளுடன் இந்தியாவின் உறவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

தனது எட்டு ஆண்டு கால ஆட்சியில், வளைகுடா இஸ்லாமிய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவதை மோடி மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டு செயலாற்றி வருகிறார்.

ஐக்கிய அரபு அமீரகத்தை பொறுத்தவரை, மோடி தனது முதல் பயணத்தை 2015ஆகஸ்டில் மேற்கொண்டார், இரண்டாவது பயணத்தை 2018 பிப்ரவரியிலும் மூன்றாவது பயணத்தை 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலும் நான்காவது பயணத்தை 2022 ஜூன் மாதத்திலும் மேற்கொண்டிருந்தார். தற்போதையது அவரது ஐந்தாவது பயணமாகும்.

2015 ஆகஸ்டில் மோடி ஐக்கிய அரபு அமீரகத்துக்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டபோது, 34 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் அந்நாட்டுக்கு மேற்கொண்ட முதல் பயணமாக அது பார்க்கப்பட்டது. மோடிக்கு முன், இந்திரா காந்தி 1981ல் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு சென்றிருந்தார்.

மோடியின் வெளியுறவுக் கொள்கையில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அளிக்கப்படும் கவனம் தொடர்பாக 2017 குடியரசு தினத்தன்று ஒரு பார்வை கிடைத்தது. அப்போது, முகமது பின் சயீத் அல் நஹ்யானை சிறப்பு விருந்தினராக மோடி அரசு அழைத்திருந்தது.

அந்த நேரத்தில் முகமது பின் சயீத் அல் நஹ்யான் ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபராக இருக்கவில்லை, அபுதாபியின் பட்டத்து இளவரசராக இருந்தார்.

பொதுவாக, ஒரு நாட்டின் பிரதமர் அல்லது அதிபரைத்தான் இந்தியா குடியரசு தினத்தில் சிறப்பு விருந்தினராக அழைக்கிறது. ஆனால் 2017 குடியரசு தினத்தில் அல் நஹ்யான் தலைமை விருந்தினராக வந்தார்.

**இந்தியா- அமீரகம் உறவின் அடித்தளமாக இருக்கும் மூன்று அம்சங்கள் எவை?**




இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் மூன்று E-க்களை அடிப்படையாக கொண்டவது. அவை, ஆற்றல் (Energy), பொருளாதாரம் (Economy) மற்றும் அயல்நாட்டில் குடியெயர்ந்து வாழ்பவர்கள் (EXpatriate).

கடந்த நிதியாண்டில் (2022-23), ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வழங்கும் மூன்றாவது பெரிய நாடாக இருந்தது. இந்தியாவின் எண்ணெய் இறக்குமதியில் பத்து சதவீத பங்கைக் கொண்டிருந்தது.

ஆனால், தற்போது 2030-க்குள் ஐக்கிய அரபு அமீரகத்துடன் இருந்து எண்ணெய் அல்லாத வணிகத்தை 100 பில்லியன் டாலராக அதிகரிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்தியாவுக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இடையிலான உறவுகளில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் முக்கிய பங்கு வகிக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா கையெழுத்திட்ட முதல் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இதுவாகும். இந்தியா கடைசியாக கடந்த 2011 ஆம் ஆண்டு ஜப்பானுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தது.

**100 பில்லியன் டாலர் வணிகம் இலக்கு**

இந்தியா தனது பொருளாதாரத்தின் அளவை 2027-க்குள் 5 டிரில்லியன் டாலராக அதிகரிக்க விரும்புகிறது. இந்த இலக்கை அடைய, 2030-க்குள் தனது ஏற்றுமதியை ஒரு டிரில்லியன் டாலராக அதிகரிக்க விரும்புகிறது. இதில் அமிரகத்துடனான ஒப்பந்தம் முக்கியப் பங்காற்றக்கூடும்.



ஐக்கிய அரபு அமீரகத்துடனான இந்தியாவின் இருதரப்பு வர்த்தகம் 1970களில் வெறும் 180 மில்லியன் டாலராக இருந்தது, தற்போது அது 85 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்துக்கான இந்திய தூதர் சஞ்சய் சுதிர் கூற்றுப்படி ஒரே ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகத்துடனான இந்தியாவின் வர்த்தகம் 19 சதவீதம் அதிகரித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தற்போதைய பயணத்தின் போது அமீரக அதிபருடன் எரிசக்தி, உணவு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்து விவாதித்தார்.

ஊடக அறிக்கைகளின்படி, 2022 இல் ஒப்பந்தம் குறித்த மறுஆய்வு மோடி மற்றும் முகமது பின் சயீதின் நிகழ்ச்சி நிரலிலும் இருந்தது.

அமீரகத்துடன் இந்தியாவின் வணிக உறவுகள் வளர்ந்து வரும் வேகம் பல ஆய்வாளர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**இந்தியாவில் முதலீடு - 4ஆவது இடத்தில் அமீரகம்**

அமீரகம் தற்போது இந்தியாவில் முதலீடு செய்யும் நான்காவது பெரிய முதலீட்டாளராக மாறியுள்ளது. தற்போது இந்தியாவில் அதன் முதலீடு 3 பில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது.

2020-21ல் இந்தியாவில் அதன் முதலீடு 1.03 பில்லியன் டாலர் ஆகும். அந்த நேரத்தில் அமீரகம் இந்தியாவில் ஏழாவது பெரிய முதலீட்டாளராக இருந்தது. தற்போது ஒரே ஆண்டில் 3 இடங்கள் முன்னேறி 4வது பெரிய முதலீட்டாளராக இருக்கிறது.

உலக விவகாரங்கள் மற்றும் மத்திய கிழக்கு விவகாரங்களுக்கான இந்திய கவுன்சிலைச் சேர்ந்த ஃபஸூர் ரஹ்மான் சித்திக் இது குறித்து கூறுகையில், "மோடி அரசின் 'மேக் இன் இந்தியா' மற்றும் ஸ்டார்ட் அப் இந்தியா போன்றவற்றில் உள்ள வாய்ப்புகளை பார்த்து ஐக்கிய அரபு அமீரகம் , முதலீடுகளை அதிகரித்து வருகிறது." என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "இதில் மிகப் பெரிய விஷயம் என்னவென்றால், இந்தியாவில் ஐக்கிய அரபு அமீரகத்தின் முதலீடு மற்றும் வணிகத்தில் தொடர்ச்சியாக உள்ளது. இது ஒரு பெரிய விஷயம். ஏனென்றால் நாம் பல நாடுகளுடன் வணிக ஒப்பந்தங்களை மேற்கொள்கிறோம், ஆனால் முதலீடு மற்றும் வணிகத்தில் தொடர்ச்சியான ஏற்றம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் ஆழத்தை விவரிக்கிறது. இதனை தக்கவைக்க நரேந்திர மோடி மீண்டும் மீண்டும் அமீரகத்துக்கு செல்கிறார்" என்று குறிப்பிட்டார்.

**இந்தியா மீது அமீரகத்தின் ஆர்வம் அதிகரித்துள்ளது ஏன்?**

சவூதி அரேபியாவைப் போலவே ஐக்கிய அரபு அமீரகமும் தனது பொருளாதாரத்தை பன்முகப்படுத்த விரும்புகிறது.

ஐக்கிய அரபு அமீரகம் எண்ணெய் சார்ந்த பொருளாதாரத்தை சார்ந்திருப்பதை குறைக்க விரும்புகிறது. அதனால்தான் அது உலகம் முழுவதும் புதிய முதலீட்டு இடங்களைத் தேடுகிறது.

2031-க்குள் அதன் உற்பத்தித் துறையை இரட்டிப்பாக்க எண்ணுகிறது. இதற்காக அந்நாடு 2.7 பில்லியன் டாலர் முதலீடு செய்யவுள்ளது.

இதன் மூலம், உணவு வணிகம், ரியல் எஸ்டேட் மற்றும் பசுமை உள்கட்டமைப்பு ஆகியவற்றில் அதன் கவனம் இப்போது உள்ளது.

இந்த அனைத்து வணிகங்களுக்கும், அமீரகம் இந்தியாவை நம்பகமான கூட்டாளியாக பார்க்கிறது. அதனால்தான் இந்தியாவில் முதலீடு செய்ய விரும்புகிறது. மேலும் இந்தத் துறைகளில் அதன் செயல்திறனைப் பயன்படுத்திக் கொள்ளவும் விரும்புகிறது.

மேற்கத்திய நிபுணர்களுக்கான செலவு அதிகம் என்பதால், இந்திய வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு அந்நாடு முக்கியத்துவம் அளிக்கிறது.

**உணவு வழங்கல் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்**

ரஷ்யா - உக்ரேன் போர் வளைகுடா நாடுகளை உணவுப் பாதுகாப்பு விஷயத்தில் தீவிரமாகச் சிந்திக்கத் தள்ளியுள்ளது.

அரபு உலகின் உணவு விநியோகத்தில் 60 சதவீதம் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து வருகிறது. எனவே, இந்தப் போர் ஐக்கிய அரபு அமீரகத்தை உலுக்கியுள்ளது.

ஒருவேளை இந்த போர் நீடித்தால், தனது உணவு விநியோகம் மற்றும் அதற்கான தொழில்நுட்ப தேவைகளை பூர்த்தி செய்யும் நாடுகளை பயன்படுத்துகொள்ள அமீரகம் விரும்புகிறது.

இந்தியாவில் உணவு உற்பத்தி அதிகம் என்பதோடு உணவு உபரி நாடாகவும் இருப்பதால், இதற்கு சரியான நாடாக அது இருக்கிறது.

இந்தியாவின் ஆயுதங்கள் மீது ஐக்கிய அரபு அமீரகமும் ஆர்வமாக உள்ளது. இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணையை வாங்க விரும்புகிறது.

இதனுடன், இந்தியாவுடன் இணைந்து ராணுவ வன்பொருள் தயாரிக்கவும் விரும்புகிறது. இந்தியாவின் மேக் இன் இந்தியா திட்டத்துக்கு பொருந்தும் விதத்தில் இது உள்ளது.

**அமீரகத்தில் உள்ள இந்திய வம்சாவளியினரின் பங்கு**

ஐக்கிய அரபு அமீரகத்தின் முதுகெலும்பாக இந்திய சமுதாய மக்கள் உள்ளனர். ஐக்கிய அரபு அமீரகத்தின் மக்கள் தொகையில் 35 சதவீத பங்களிப்புடன் சுமார் ஒரு கோடி இந்தியர்கள் உள்ளனர். இவர்கள் அங்கு ஒவ்வொரு துறையிலும் வேலை செய்வதோடு ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாதவர்களாக திகழ்கிறார்கள்.

வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியா அதிக அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது. 2020 ஆம் ஆண்டில், உலகம் முழுவதும் குடியேறிய இந்தியர்கள் 83 பில்லியன் டாலர்களை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளனர்.

இதில் பெரும் பகுதியினர் வளைகுடா நாடுகளில் பணிபுரியும் இந்தியர்கள்தான். அதிக அளவிலான பணம் அமெரிக்காவில் குடியேறிய இந்தியர்களால் அனுப்பப்படுகிறது.

வெளியில் வேலை செய்பவர்கள் அனுப்பும் தொகையில் இதன் பங்கு 23.4 சதவீதம். 18 சதவீதத்துடன் அமீரகம் அடுத்த இடத்தில் உள்ளது.

2018 ஆம் ஆண்டில், வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள் தங்கள் வீடுகளுக்கு 79 பில்லியன் டாலர் அனுப்பியுள்ளனர். இதில், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பணிபுரிபவர்களின் பங்கு 13.8 பில்லியன் டாலர் ஆகும்.

சவூதி அரேபியாவிலிருந்து 11.2 பில்லியன் டாலர்களும், குவைத்திலிருந்து 4.1 பில்லியன் டாலர்களும், ஓமானில் இருந்து 3.3 பில்லியன் டாலர்களும் அனுப்பப்பட்டுள்ளன.

# ஆட்சிமுறையில் இன்று காணப்படும் முரண்பாடு



கலாநிதி ஜெகான் பெரேரா

நிதிப்பற்றாக்குறையை காரணம் காட்டி உள்ளூராட்சி தேர்தல்களை அரசாங்கம் ஒத்திவைத்து இப்போது நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. இலங்கையில் முதற்தடவையாக சட்டக்கட்டமைப்புக்கு வெளியேயும் அரசாங்க திறைசேரியிடம் பணம் இல்லை என்ற காரணத்தினாலும் தேர்தல் ஒன்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. தேர்தல்களுக்கு போகாமல் சமூகத்தின் அடிமட்டத்தில் அரசியல் ரீதியில் தன்னைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சி வெற்றியளிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று தோன்றுகிறது.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தாமல் பாராளுமன்றத்தில் சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலமாக, ஏற்கெனவே கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளை மீண்டும் கூட்டி செயற்படவைப்பதற்கான அரசாங்கத்தின் விருப்பத்தெரிவு அரசியலமைப்புக்கு முரணானது என்று சட்டமா அதிபர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பில் எடுக்கப்படக்கூடிய வேறு எந்த தீர்மானமும் ஐந்து வருடங்களுக்கும் மேலாக நடத்தப்படாதிருக்கும் மாகாண சபை தேர்தல்கள் விடயத்தில் இதே கோட்பாடு ஏன் பிரயோகிக்கப்படவில்லை என்ற கேள்வி எழுவதற்கு வழிவகுத்திருக்கும்.

தற்போது நடைமுறையில் இல்லாத உள்ளூராட்சி சபைகளுக்கு புத்துயிர் கொடுக்க வேண்டுமானால் அரசாங்கம் சட்டத்தை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவதுடன் சர்வஜனவாக்கெடுப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்தையும் பெறவேண்டியிருக்கும். அரசாங்கம் விரைவாக அண்மைய எதிர்காலத்தில் விரைவாக எந்த நேரத்திலும் தேர்தல் செயன்முறை அல்லது சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றின் ஊடாக மக்களின் கருத்தைப் பெறுவதற்கு விரும்பக்கூடிய சாத்தியம் இல்லை. அரசாங்கத்தின் செல்வாக்கில் குறிப்பாக ஜனாதிபதியின் செல்வாக்கில் அதிகரிப்பு ஒன்று இருப்பதாகவும் ஆனால் ஒட்டுமொத்த செல்வாக்கு தொடர்ந்தும் தாழ்ந்த நிலையில் இருப்பதாக மிகவும் அனுகூலமான கருத்துக்கணிப்புகள் காட்டுகின்றன.

உள்ளூராட்சி தேர்தல்களில் அரசாங்கம் தோல்வியடையக்கூடிய சாத்தியம் இருப்பது சட்டத்தின் பிரகாரம் அந்த தேர்தல்களை நடத்த அது மறுப்பதற்காக நியாயப்படுத்தலாக இருக்கமுடியாது. உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் காட்டும் மறுப்பு இலங்கையை இன்றைய கவலைக்குரிய நிலைக்கு கொண்டுவந்த தண்டனையின்மைக் கலாசாரத்தின் (Culture of Impunity) இன்னொரு குழப்பம் தரும் அறிகுறியாகும்.

சிறந்த முறையில் ஆட்சிசெய்யத் தவறிய அல்லது உறுதிமொழிகளை நிறைவேற்றத்தவறிய தலைவர்களையும் பிரதிநிதிகளையும் அகற்றுவதற்கு மக்களுக்கு வாய்ப்பைக் கொடுக்கும் தேர்தல்களே பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான பிரதான ஜனநாயக வழிமுறையாகும். தேர்தல்களின் மூலமாக ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் அரசியல் முறைமைக்குள் புதிய முகங்களைக் கொண்டுவரும்.

அரசாங்கத்துடன் இணையுமாறு எதிர்க்கட்சிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் அழைப்பு விடுத்தார். ஆனால் ஒரு சிலரே தங்களது அரசியல் கட்சிகளைக் கைவிட்டு அரசாங்கத்துடன் இணைந்ததை காணக்கூடியதாக இருந்தது. அவர்களுக்கு அமைச்சர் பதவிகள் கொடுக்கப்பட்டன. எதிரணி முழுவதும் தேர்தல் செயல்முறையையும் அரசியலமைப்பையும் மீறி சட்டத்தின் ஆட்சியின் ஒரு பிறழ்வாக தனது பங்காளிகளாக வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

**பொறுப்புக்கூறல் இல்லை**

வழமையான சூழ்நிலைகளின் கீழ், அரசாங்கம் ஒன்று அரசியலமைப்பை மீறிச்செயற்பட்டால் எதிர்க்கட்சி நீதிமன்றத்தை நாடி பரிகாரத்தை காணும். ஆனால் இத்தடவை தேர்தல்களை நடத்தாமல் விடுவதற்கு நிதிப்பற்றாக்குறை ஒரு சாட்டாக இருக்கமுடியாது என்ற நீதிமன்றங்களின் தீர்ப்பை அரசாங்கத்தினால் அலட்சியம் செய்யப்பட்டிருக்கிறது. பாராளுமன்றச் சிறப்புரிமையை மீறியதாக விசாரணை செய்வதற்கு பாராளுமன்றக்குழு முன்னிலையில் நீதிபதிகள் அழைக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தலும் கூட விடுக்கப்பட்டது.

ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. அதேவேளை நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசாங்கம் மதித்து நடக்கவுமில்லை. தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கும் ஜனநாயகம் ஒன்றில் மக்கள் பரிகாரம் காண்பதற்கு இருக்கக்கூடிய கடைசி நிறுவனம் நீதித்துறையேயாகும். அதை மதித்து செயற்படுவதன் மூலமாக அரசாங்கத்தில் உள்ளவர்கள் முன்னுதாரணத்தை வகுக்கவேண்டியது அவசியமாகும்.

மக்களை அணிதிரட்டி வீதிகளில் இறங்கச்செய்வது எதிரணி எடுக்கக்கூடிய அடுத்த நடவடிக்கையாக இருக்கலாம். ஆனால் எதிரணி கட்சிகளுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ வீதிகளில் இறங்கி அரசியல் போராட்டங்களில் ஈடுபடுவதில் ஆர்வம் இருப்பதாக தெரியவில்லை. பொருளாதாரத்துக்கு அவசியமான முதலீடுகளை சீர்குலைக்கக்கூடிய உறுதிப்பாடின்மையை தோற்றுவிக்க அவர்கள் விரும்பவில்லை. மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதற்கு சட்டங்களைப் பயன்படுத்துவதில் கடும் முனைப்புடன் செயற்படும் அரசாங்கத்துடன் மோதவும் அவர்கள் தயாராக இல்லை.

நாட்டின் சட்டங்களை மதித்து உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு மறுப்பதன் மூலமாக அரசாங்கம் வெளிக்காட்டும் பொறுப்புக்கூறல் இன்மை ஆட்சிமுறையின் வேறு துறைகளுக்கும் பரவலாம். அத்தகைய எண்ணற்ற துறைகளில் தண்டனையின்மை காணப்படுகிறது.

மக்களின் உடனடி நல்வாழ்வில் எந்த தாக்கத்தையும் கொண்டிராதவையாக தோன்றுகின்ற மிகவும் செலவுகூடிய செயற்திட்டங்கள் தொடர்பில் அரசாங்க அமைச்சர்கள் யோசனைகளை முன்வைக்கிறார்கள். அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு பிரச்சினையை தீர்ப்பதற்கு ஓய்வூதிய நிதியங்களை இலக்குவைப்பதில் காண்பிக்கப்பட்டிருக்கும் பொறுப்பக்கூறலின்மை ஒரு பெரும் அனர்த்தமாகும். அதன் விளைவுகள் இன்னமும் வெளிப்படவில்லை. இதற்கு பொறுப்புக்கூறல் அவசியமாகிறது.

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு சென்ற மக்களில் பலருக்கு ஏற்பட்ட துன்பியல் கதியின் விளைவாக தரங்குறைந்த மருந்துப்பொருட்கள் விநியோகம் தொடர்பிலான பிரச்சினை பகிரங்கத்துக்கு வந்திருக்கிறது. மருந்துப்பொருட்கள் விநியோகத்தில் நிலவும் ஊழலும் பொறுப்புக்கூறல் இன்மையும் ஊடகங்களினால் பொதுமக்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த பிரச்சினை அரசாங்க சுகாதார சேவையை பயன்படுத்துபவர்களுக்கு ஜீவமரண விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும்.

மக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக இந்த விவகாரத்தில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. இதே போன்றே பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிடும் சிறுவர்களின் எண்ணிக்கை, தங்களது தொழில்களை இழந்தவர்களின் எண்ணிக்கை, சமுர்த்தி ஃ அஸ்வேசும சமூக்நலன்புரித் திட்டங்களில் சேர்க்கப்படாதோரின் எண்ணிக்கையும் தற்போதைக்கு இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் பரிகார நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக கருத்தில் எடுககப்படவேண்டியது முக்கியமானதாகும்.

**நம்பகத்தன்மை இல்லை**

தேர்தல்கள் இல்லாத இந்த காலப்பகுதியில் பாராளுமன்றம் புதிய சட்டங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை போன்று காணப்படுகிறது. வரிகளுக்காக, சுற்றுலாத்துறைக்காக, பயங்கரவாதத்துக்கு எதிராக, தெழிலாளர்களுக்காக, ஊழலுக்கு எதிராக,ஒலிபரப்புக்காக, அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்காக, உண்மை ஆணைக்குழுவுக்காக பல புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. வரிச்சட்டங்கள் போன்ற சில சட்டங்கள் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கும் அதேவேளை ஊழலுக்கு எதிரான சட்டம், தொழில் சட்டம் போன்ற வேறு சில சட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம், ஊடக ஒலிபரப்பு சட்டம் போன்ற இன்னும் சில சட்டங்கள் தாமதிக்கப்பட்டிருக்கின்றன.

கோட்பாட்டு மட்டத்தில் பெருமளவுக்கு ஆராயப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தொடர்பான சட்டங்கள் இறுதிசெய்யப்பட்டு இன்னமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த சட்டங்களில் சிலவற்றில் அனுகூலமான அம்சங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை மக்களுக்கு பொறுப்புக்கூறாமல் இருக்கும் ஒரு அரசாங்கத்தினால் கொண்டுவரப்படுகின்றன. நீதிமன்ற உத்தரவுகளை மதித்துச் செயற்படாத ஒரு அரசாங்கம் ஏனைய சமூகத்துக்காக சட்டங்களை இயற்றுவது இன்றைய ஆட்சிமுறையில் உள்ள முரண்பாடாகும்.

தற்போதைய அரசாங்கம் அதன் ஜனநாயக நியாயப்பாட்டைப் (Democratic Legitimacy ) பொறுத்தவரை, பிரச்சினையொன்றைக் கொண்டிருக்கிறது. தற்போதைய தருணத்தில் நினைத்துப் பார்க்கக்கூடிய வேறு எந்தவொரு தலைவரையும் விட சிறப்பான ஒரு பணியை செய்துகொண்டிருப்பதாக பலரும் ஏற்றுக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் பிரகாரம் சட்டப்படி ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர். சர்வதேச சமூகமும் மேல்மட்ட வர்த்தக சமூகமும் பரந்தளவு நடுத்தர வர்க்கத்தினரும் அவர் மீது நம்பிக்கை வைத்திருப்பதாக தோன்றுகிறது. ஆனால் அவர் தார்மீக நியாயப்பாட்டை இழந்த ஒரு பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டவர்.

ஒரு வருடத்துக்கு முன்னர் மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அவர் தலைமையிலான முழு அரசாங்கமும் பதவி விலகியபோது விரைவாக தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் நாட்டை ஆட்சிசெய்யும் பொறுப்பைக் கையேற்க புதிய தலைமைத்துவம் ஒன்று தோன்றும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு பதிலாக அரசியலமைப்பை மீறும் வகையில் உள்ளூராட்சி தேர்தல்கள் கூட நடத்தப்படாமல் இருக்கும் ஒரு நிலைவரத்தையே காண்கிறோம். சட்டத்துக்கு அப்பாற்பட்டதாக தன்னை அரசாங்கம் கருதுவது போன்று இருக்கிறது.

அரசாங்கம் அதற்கு பாராளுமன்றத்தில் இருக்கும் பெரும்பான்மையைப் பயன்படுத்தி புதிய சட்டங்களை நிறைவேற்றமுடியும். ஆனால் சட்ட சீர்திருத்தங்களும் புதிய சட்டங்கள் உருவாக்கமும் பிரச்சினைத் தீர்வுக்கோ அல்லது சிறந்த நல்லாட்சிக்கோ வழிவகுக்கப் போவதில்லை. சட்டங்கள் மாற்றியமைக்கப்படவும் முடியும். அரசியலமைப்புக்கான 17 வது திருத்தத்துக்கு பிறகு 18 வது, 19 வது, 20வது திருத்தங்கள் என்று வந்து இறுதியில் மிகவும் தளர்வான 21வது திருத்தத்தில் முடிந்திருக்கிறது. போர்க்களத்தில் என்றாலென்ன, தேசிய பொருளாதாரத்தில் என்றாலென்ன குற்றங்களை செய்தவர்கள் பொறுப்புக்கூறவைக்கப்படவேண்டியதே அவசியமானதாகும். அவர்கள் மீண்டும் - குற்றங்களைச் செய்யாமல் மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்கக்கூடிய நிலைமை உறுதிப்படுத்தப்படவேண்டும். இதுவே நிலைமாறுகால நீதியின் பெறுமதியாகும். இந்த நீதி உண்மை கண்டறியப்பட்டு, குற்றங்களைச் செய்தவர்கள் பொறுப்புக்கூற வைக்கப்பட்டு, பாதிகப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டிய அவசியத்தையும் மீண்டும் குற்றங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்ய முறைமை மாற்றத்தை செய்யவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

பொருளாதாரக் குற்றங்களைப் பொறுத்தவரை, ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியத்தை வைத்திருப்பவர்களுக்கும் நாடு வங்குரோத்து நிலையை அடைந்த காரணத்தினால்தங்களது வருமானமும் சேமிப்புகளும் அரைவாசியாகிப் போய் பரிதாபநிலைக்குள்ளானவர்களுக்குமே நிவாரணம் அளிக்கவேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் இலங்கை வங்குரோத்து நிலை அடைந்தமைக்கான காரணங்களை ஆராய்ந்து விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அண்மையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவைப் போன்று குற்றங்களைச் செய்தவர்களே தீர்மானங்களை எடுப்பவர்களாக இருந்தால் இப்போதைக்கு மீட்சி இல்லை.

# காத்தான்குடி பெண்கள் காப்பகத்துக்கு கிழக்கின் முன்னாள் ஆளுநர் விஜயம்

மட்டக்களப்பு, ஜூலை 19

காத்தான்குடி பெண்கள் காப்பகத்தின் தலைவரும் முன்னாள் காத்தானக்குடி நகர சபை உறுப்பினருமான சல்மா அமீர் ஹம்சாவின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல். எம். ஏ. ஹிஸ்புல்லாஹ் விஜயம் செய்தார்.

இப் பெண்கள் காப்பகம் தொடர்பான அன்றாட நடவடிக்கைகளை பார்வையிட்டதோடு , எதிர்காலத்தில் இந்த காப்பகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இக்காப்பகத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களோடு கலந்துரையாடினார்.

மேலும் காப்பகத்தில் பராமரிக்கப்படுகின்ற பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் சந்தித்து அவர்களின் குறை நிறைகளை கேட்டறிந்து கொண்டார். மேலும் எதிர்வரும் காலங்களில் இக்காப்பகத்தின் அபிவிருத்தியில் தனது முழுமையான பங்களிப்பை தருவதாக முன்னாள் ஆளுநர் இதன் போது குறிப்பிட்டார். (அ)




# முஸ்லிம் திணைக்களத்தின் முஹர்ரம் புதுவருட நிகழ்வு

கொழும்பு, ஜூலை 19

முஹர்ரம் புதுவருடத்தை சிறப்பிக்கும் முகமாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (மஸ்ஜித் அல் மக்பூல்) மேமன் ஹனபி மஸ்ஜிதுடன் இணைந்து நடாத்தும் முஹர்ரம் புதுவருட நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 6.45 மணி முதல் கொழும்பு - 06, இல 175ஃ5, டபிள்யு. ஏ.டீ. சில்வா மாவத்தையிலுள்ள மேமன் ஹனபி மஸ்ஜிதில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பிரதம அதிதி யாகக் கலந்து கொள்கிறார்.

முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில், திணைக்கள அதிகாரிகள் உட்பட உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு

உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமா அத்தார்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஹிஜ்ரி 1445 ஆவது முஹர்ரம் புது வருட நிகழ்வாக இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

# கோட்டாபய வழியில் கிழக்கை ரணிலும் புறக்கணிக்கின்றார்

## இம்ரான் எம். பி. சாடல்

திருகோணமலை,ஜூலை 19

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழியில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கிழக்கு மாகாண முஸ்லிம்களைப் புறக்கணித்து வருகின்றார் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையில் கிழக்கு மகாணத்தில்தான் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்றனர். இந்நிலையில் கோட்டாபய ராக்ஷவால் நியமிக்கப்பட்ட ஆளுநர் இந்த மாகாண முஸ்லிம்களை பல்வேறு வகையிலும் புறக்கணித்து வந்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அதிகார சபைகள், ஆணைக் குழுக்கள் என்பவற்றுக்கான தவிசாளர் மற்றும் பொது முகாமையாளர்கள் நியமனத்தில் முஸ்லிம்கள் எவரையும் அவர் நியமிக்காமல் புறக்கணித்திருந்தார். இதேபோல அமைச்சுக்களின் செயலாளர்களிலும் முஸ்லிம்களை அவர் நியமிக்கவில்லை. இது குறித்து நான் பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபித்திருந்தேன்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்திலும் கிழக்கு மாகாணத்தில் அதே முஸ்லிம் புறக்கணிப்பு தொடர்ந்து வருகின்றது. தற்போதும் கிழக்கு மாகாண அதிகார சபைகள், ஆணைக்குழுக்கள் என்பவற்றுக்கான தவிசாளர் மற்றும் பொது முகாமையாளர்கள் நியமனத்தில் முஸ்லிம்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை. அமைச்சுக்களின் செயலாளர் நியமனத்தில் முஸ்லிம் உத்தியோகத்தர்களின் சிரேஷ்ட தரம் கருத்தில் கொள்ளப்படவில்லை.

எனவே, கோட்டாபயவின் அதே வழியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலும் அதே முஸ்லிம் விரோதப் போக்கு தொடர்ந்து வருகின்றது. எனினும், முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இது விடயத்தைக் கண்டு கொள்ளாமல் இருப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.



நிலைமை இப்படியே நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்காலத்தில் இன்னும் பல வழிகளிலும் புறக்கணிக்கப்படுவார்கள் என்பது உறுதி. எனவே, சகல முஸ்லிம்களும் இது தொடர்பில் கவனத்தில் கொண்டு எல்லா வழிகளிலும் ஜனாதிபதிக்கு எமது அதிருப்தியை தெரிவிக்க முன்வரவேண்டும் - என்றார். (ஐ)






# காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி இடமாற்ற விடயத்தை இனரீதியான குழப்பமாக்கவேண்டாம்

## அமைச்சர் நசீர் விளக்கம் பெறவேண்டும் என்கிறார் ஜனா எம்.பி

மட்டக்களப்பு, ஜுலை 19

**காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி இடமாற்ற விடயத்தை தயவு செய்து இனரீதியாகப் பார்த்து அமைச்சர் நசீர் அகமட் குழப்பத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். பூரண விளக்கம் இல்லாமல் தேவையற்ற விதத்தில் ஆளுநரை அவமதிப்பது, குற்றம் சாட்டுவது பொருத்தமானதல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.**

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி இடமாற்ற விடயம் தொடர்பில் ஆளுநருக்கு எதிராகக் கருத்து வெளியிட்டமை மற்றும் இப்பிரச்னை தொடர்பில் பா.உ ஜனாவின் பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தை ஆள்வதற்கு செந்தில் தொண்டமான் யார் என்று அமைச்சர் நசீர் அகமட் காத்தான்குடி பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே கேள்வியெழுப்பியிருந்தார்.

இது தற்போது ஒரு பெரிய சர்ச்சையாக கிழக்கு மாகாணத்திலே உருவெடுத்திருக்கின்றது. அமைச்சர் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தினூடாக வந்த மாகாணசபை முறையில் மாகாணசபையில் அரசியல் ரீதியான பிரதிநிதிகள் இல்லாதவிடத்து முழு மாகாணத்தின் அதிகாரமும் ஆளுநரின் கைகளில் தான் இருக்கின்றது. மாகாணத்தை ஆள்வதற்கு செந்தில் தொண்டமான் யார் என்ற கேள்வி ஒரு பிரயோசனம் அற்றதாகவே இருக்கின்றது. தற்போதைய நிலையில் ஆளுநர் தான் மாகாணத்தை ஆட்சி செய்யும் கடமையில், பொறுப்பில் இருக்கின்றார்.

காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரியின் இடமாற்றம் என்பது உண்மையிலேயே ஒரு பழிவாங்கலாக ஆளுநர் செய்யவில்லை என்றே கருதுகின்றேன். கோட்டக் கல்வி அதிகாரியாக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர் தான் இருக்கவேண்டும் என்று சுற்றுநிருபம் இருக்கின்ற காரணத்தினாலும், வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசின் அடிப்படையிலும சம்மந்தப்பட்டவர் ஆளுநரை அனுகியிருந்தார். அந்த விடயத்திலே ஆளுநரிடம் அவரை சிபாரிசு செய்யுமாறு என்னிடமும் கேட்கப்பட்டது. அவரது தகைமையின் அடிப்படையில் அவரை நானும் சிபாரிசு செய்திருந்தேன். ஏற்கனவே கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்தவர் அதிபர் தரத்திலானவர். அவருக்கு ஒரு பொருத்தமான பாடசாலையைக் கொடுக்குமாறு ஏற்கனவே கிழக்கு மாகாண செயலாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரப்பட்டது.ஆனால் அந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியிடம் பொறுப்புகளை ஒப்படைக்காமல் அடம்பிடித்ததன் காரணமாகத் தான் அந்த அதிபர் மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக நான் அறிகின்றேன்.

அதாவது மேலதிகாரியான மாகாண கல்வி அமைச்சின் செயலாளரது உத்தரவுக்குக் கட்டுப்படாததன் காரணமாகத்தான அவர் இடம் மாற்றப்பட்டுள்ளதாக அறிகின்றேன். அந்த ரீதியில் நசீர் அகமட் பூரண விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேவையற்ற விதத்தில் ஆளுநரை அவமதிப்பது, குற்றம் சாட்டுவது பொருத்தமானதல்ல.

இந்த அறிக்கையை நான் வெளியிடவேண்டிய அவசியம் என்னவென்றால் இந்த விடயத்தில் நானும் தொடர்பு பட்டவன். என்னுடைய பெயரும் அந்த பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே எடுக்கப்பட்டது என்ற காரணத்தினாலேயே இந்த விளக்கத்தைக் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

தயவு செய்து இதனை இன ரீதியாகப் பார்த்து அமைச்சர் குழப்பத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இந்த ஆளுநர் வந்ததன் பிற்பாடுதான் இந்த மாகாணத்திலே ஓரளவிற்கு இனப்பாகுபாடற்ற, மதப் பாகுபாடற்ற வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே இருந்த ஆளுநர் அனுராதா ஜகம்பத் ஒரு இனத்திற்காக மாத்திரம் வேலை செய்து ஏனைய பெரும்பான்மையாக வாழும் தமிழ் பேசும் இனங்களை ஒதுக்கியிருக்கும்போது நசிர் அகமட் அமைச்சராக இருந்து கொண்டு அவருக்கு எதிராகப் பேசாதவிடத்து தற்போது இந்தச் சிறிய பிரச்னையைப் பூதாகரமாக எடுப்பது வேண்டத்தகாத விடயம் என்பதை அவர் புரிந்து கொள்ளவேண்டும்-என்றார்.

# கோமாரி வால்குளிக்குளம் புனரமைப்பு பணிக்கு வன பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி மறுப்பு

அம்பாறை, ஜுலை 19

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குளங்களை உலக வாங்கியின் 75 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைப்புச் செய்து விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கோமாரி பிரதேச வால்குளிக்குளத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கு வன பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி மறுத்து வருகின்றது.



வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் இக்குளமானது புனரமைப்புச் செய்யப்படுமிடத்து சுற்றுயுள்ள 250 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும்.

மேற்படி குளத்தின் புனரமைப்பு தொடர்பில் அனுமதி மறுக்கப்பட்டமையை பிரதேச மக்கள் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனின் கவனத்திற்குக் கொண்டு வந்தமையையிட்டு மேற்படி பிரதேசத்திற்குக் களவிஜயம் மேற்கொண்டு குளத்தினையும், குறித்த விவசாய நிலங்களையும் பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுபோகரன் தலைமையில் கோமாரி பல்தேவைக் கட்டடத்தில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச மக்களுடனான கலந்துரையாடலில் குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது வனபாதுக்காப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடி உரிய அனுமதியைப் பெற்று இக்குளத்தினைப் புனரமைப்பச் செய்வதற்கு ஆவன செய்து வருவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அஸ்வெசும நலன் உதவி தொடர்பான பயிற்சி நெறி



மட்டக்களப்பு, ஜுலை 19

“அஸ்வெசும” நலன் உதவி திட்டத்துடன்இணைந்த வகையில் சமுர்த்தி திட்டத்தினை நடைமுறைப்படுத்தல், தொடர்பான பயிற்சி நெறி அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களில் தமிழ் மொழியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அக்கரைப்பற்று செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சி நெறியின் பிரதான வளவாளராக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம் சப்றாஸ் கலந்து கொண்டு நடத்தினார்.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார், உதவிப் பிரதேச செயலாளர் வை. றாசித் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர். (அ)

# மட்டக்களப்பில் தனியார் பஸ் ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



மட்டக்கலப்பு, ஜுலை 19

மட்டக்களப்பு மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்து வந்த போராட்டம் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வழங்கிய உறுதிமொழியையடுத்து கைவிடப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது சாணக்கியனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் தனியார் பஸ் ஊழியர்களினால் தாக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று முன் தினம் காலை முதல் மட்டக்களப்பு தனியார் பஸ் நிலையத்தில் தமது பஸ்களை நிறுத்தி நேற்றுக் காலை முதல் பணி பகிஷ்கரிப்பை முன்னெடுத்ததுடன் கவனவீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அண்மையில் விபத்தினை ஏற்படுத்தி 11பேரின் உயிர்களை பலியெடுத்த பஸ் சேவையானது முறையான அனுமதிகளைப்பெறாமல் தொடர்ச்சியாக இயங்கிவருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்ஸூக்கும் தனியார் பஸ்ஸூக்கும் இடையில் சேவை ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தி தருமாறு கோரியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் வாழைச்சேனை தொடக்கம் கல்முனை வரையில் சேவையிலீடுபடும் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள், பஸ் உரிமையாளாகள் கலந்துகொண்டனர்.

அண்மையில் விபத்தினை மேற்கொண் பஸ் சேவையானது நான்கு அனுமதிப்பத்திரங்களை வைத்துக்கொண்டு பத்து பஸ்களை சேவையில் ஈடுபட்டுத்துவதாகவும் அத்துடன் அனுமதி பத்திரத்திற்கு மாறான போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதாகவும் இதன் காரணமாக குறுகிய தூர சேவையில் ஈடுபடும் பஸ்கள் பாதிக்கப்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாகைகளையும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தாங்கியிருந்தனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஊடகங்களிடம் கருத்துகள் தெரிவித்திருக்கும் போது அங்குவந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்ற உறுப்பினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் அங்கிருந்த பஸ் சாரதிகள், உரிமையா ளர்களினால் குறித்த நபர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டதுடன் அவர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டதால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது.

இதன்போது அங்கிருந்த பொலிஸாரும் ஏனைய தனியார் பஸ் ஊழியர்களும் குறித்த நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். (அ)

# ஐரோப்பா வெப்பநிலை மேலும் அதிகரிக்கலாம்!

## இத்தாலியில் 16 நகரங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

**ரோம், ஜூலை 19**

**தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் நிலவும் கடும் வெப்பமான வானிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.**

**அதிக வெப்பநிலை காரணமாக கிரீஸில் காட்டுத்தீ ஏற்பட்டமையால் குறித்த பகுதியிலுள்ள விடுமுறை முகாம் ஒன்றிலிருந்து ஆயிரத்து 200 சிறுவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.**

அதேநேரம் இத்தாலியில் 16 நகரங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் இறுதியாக கடந்த 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 48.8 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியிருந்தது.

இந்தநிலையில் ஐரோப்பியாவில் தற்போது நிலவும் வெப்ப அலையானது அடுத்த மாதமும் தொடரலாம் எனவும், புவி வெப்பமடைதலின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் வானிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் சீனாவில் தற்காலிகமாக நேற்று முன்தினம் 52.2 பாகை செல்சியஸ் அளவில் அதிகபட்ச வெப்பநிலையை பதிவாகியுள்ளது.

அத்துடன் அமெரிக்காவின், தென்மேற்குப் பகுதிகளிலும் அதிக வெப்பநிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கலிஃபோர்னியாவில் உள்ள டெத் வேலி பகுதியில் 53.9 பாகை செல்சியஸ் வரையான வெப்பநிலை பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (அ)

# எகிப்தில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 13 பேர் பலி



கெய்ரோ, ஜூலை 19

எகிப்து தலைநகர் கெய்ரோவில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பகுதியில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த நபர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)



# அம்பலத்துக்கு வந்தது காதல் விவகாரம் சபாநாயகர், பெண் எம்.பி. இராஜினாமா

சிங்கப்பூர் சிற்றி, ஜூலை 19

தமது முறையற்ற காதல் விவகாரம் அம்பலமானதால் சிங்கப்பூர் பாராளுமன்ற சபாநாயகரும் பெண் எம்.பி ஒருவரும் பதவியை இராஜினாமா செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சபாநாயகர் டான் சுவான் ஜின் மற்றும் செங்லி ஹூய் என்ற எம்.பியுமே இவ்வாறு தமது இராஜினாமா கடிதத்தை பிரதமரிடம் கையளித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பிரதமர் லீ சியென் லூங் "மக்கள் செயல் கட்சியின் உயர்ந்த தகுதி மற்றும் தனிப்பட்ட நடத்தையை பேணுவதற்காக சபாநாயகர் மற்றும் எம்.பி.யின் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் தகாத உறவில் இருந்தனர். அதை கடந்த பெப்ரவரி மாதம் நிறுத்த சொன்ன பிறகும் அது தொடர்ந்தது. இவ் விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு சபாநாயகரிடம் கூறினேன். ஆனால் அது தொடர்ந்தபடியே இருந்தது. இதனால் அவர்களது இராஜினாமாவை ஏற்றுக்கொண்டேன் "-என்றார். (அ)

# சீனாவில் இளைஞர், யுவதிகளிடையே வேலையில்லாப் பிரச்னை அதிகரிப்பு!

பீஜிங், ஜூலை 19

சர்வதேச ரீதியாக பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது நிலையில் உள்ள சீனாவில் இளைஞர், யுவதிகளிடையே வேலையில்லா பிரச்னை அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் 16 முதல் 24 வயதானவர்களின் வேலையின்மை விகிதாசாரம் கடந்த மாதத்தில் 21.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக உத்தியோகபூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சீன அரசாங்கத்தால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட தரவுகளின்படி, சீனாவின் பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் இரண்டாவது காலாண்டில் 6.3 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது முதல் காலாண்டின் வளர்ச்சியை விட அதிகமானது என்ற போதிலும் பொருளாதார நிபுணர்களின் எதிர்பார்ப்புக்கள் தவறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீன உற்பத்திகளுக்கான உலகளாவிய தேவை கணிசமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, ஒரு கோடியே பத்து லட்சத்திற்கும் அதிகமான பல்கலை கழக பட்டதாரிகள் இந்த வருடம் சீனாவின் வேலை வாய்ப்பு சந்தையில் இணையவுள்ளனர்.

எப்படியிருப்பினும் சீனா தற்போது எதிர்கொள்ளும் இளைஞர் வேலையில்லா நிலைமையை முற்றாக அகற்ற மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நம்பப்படுகின்றது.

இது தற்காலிய பின்னடைவு என சீன பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, இந்த வருட பொருளாதார வளர்ச்சிக்கான 5 சதவீத இலக்கினை எட்டுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும் என சீன பிரதமர் லீ கியாங் கடந்த மார்ச் மாதம் வலியுறுத்தியிருந்தார்.

ஷஇருப்பினும் திட்டமிடப்பட்ட இலக்கை எட்டுவது இலகுவாக இருக்காது என தெரிவித்திருந்த போதிலும், சீனா உறுதியாக செயல்பட்டு மீண்டும் முன்னேற்றத்தை நோக்கி நகரும் எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கருங்கடல் வழி தானியங்கள் ஏற்றுமதி ஒப்பந்தத்திலிருந்து விலகிய ரஷ்யா

மொஸ்கோ, ஜூலை 19

உக்ரைன் தானியங்களை கருங்கடல் வழியாக சர்வதேச சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்ய உதவும் ஒப்பந்தம் நேற்று முன்தினம் நள்ளிரவு முடிவுக்கு வந்தது.

இந்த ஒப்பந்தத்தை மேலும் நீடிக்க ரஷ்யா மறுத்ததால், ஒப்பந்தம் காலாவதியானது.

ஜூலை 2022 இல் ஐ. நா. மற் றும் துருக்கியின் முன்முயற்சி யால் உருவான இந்த ஒப்பந்தம் கடந்த மே மாதம் முடிவடைய விருந்தபோது, இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை ரஷ்யா முடிவுக்குக் கொண்டுவந்தது, உணவுப் பாதுகாப்பு மற்றும் விலைவாசி உயர்வு குறித்த கவலைகளைத் தூண்டியுள்ளது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிய துறைமுகங்களை ரஷ்யா முற்றுகையிட்டதன் விளைவாக உலகளவில் உணவு தானிய விலையேற்றம், வறுமையான ஆபிரிக்க நாடுகளில் பஞ்ச அபாயங்களை ஏற்படுத்தியது. இதையடுத்து, உருவான இந்த ஒப்பந்தத்தின் விளைவாக மில்லியன் கணக்கான தொன் தானியங்களை ஏற்றுமதி செய்யப்பட்டது.

இருப்பினும், ஒப்பந்தம் இப்போது முடிவடைவதும் அபாயம் ஏற்பட தொடங்கியதுமே, தானியங்களின் விலைகள் ஏற்கனவே உயரத் தொடங்கியுள்ளன, இதனால் நுகர்வோர் மற்றும் மில்லியன் கணக்கான மக்கள் உலகளவில் பசியை எதிர்கொள்கின்றனர் என்று கார்டியன் தெரிவித்துள்ளது.

கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை ரத்து செய்யும் ரஷ்யாவின் முடிவு குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டெரஸ் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார்.

கிரெம்ளினின் இந்த நடவடிக்கை உலகெங்கிலும் உள்ள பட்டினி மற்றும் கஷ்டப்படும் நுகர்வோரை எதிர்கொள்ளும் நூற்றுக்கணக்கான மில்லியன் மக்களுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவர் வலியுறுத்தினார்.

ரஷ்யா ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட செய்தி வெளியானதால், சந்தைகளில் தானிய விலைகள் ஏற்கனவே அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. ஒப்பந்தத்தின் கீழ், தானியங்களின் விலை 35 சதவீதம் குறைந்துள்ளது.

ஒப்பந்தத்தின் முறிவு உணவு மலிவு மற்றும் கிடைக்கும் தன்மை பற்றிய கவலைகளை மேலும் அதிகரிக்கிறது.

ஐ.நா.வில் உள்ள ரஷ்ய மூத்த அதிகாரி ஒருவர் தானிய ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கான முடிவு இறுதியானது என்று கூறினார். இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் மற்றும் துருக்கியின் புதிய வெளியுறவு மந்திரி ஹக்கன் பிடான் ஆகியோருக்கு இடையே திட்டமிடப்பட்ட விவாதங்கள் இதனால் பாதிக்கப்பட்டன.

உடன்படிக்கையை முறித்துக் கொள்வதற்கு ரஷ்யா வழங்கிய விளக்கங்கள் குறித்து பொதுச் செயலாளர் குட்டெரஸ் தனது ஆழ்ந்த ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார். ரஷ்ய தானிய வர்த்தகம் மற்றும் உரச் சந்தைகள் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியைக் கண்டதால், ரஷ்ய உணவுச் சந்தைகளின் இழப்பு உட்பட ரஷ்யாவின் கூற்றுக்களை அவர் நிராகரித்தார்.

பல்வேறு நாடுகளின் தலைவர்கள் ரஷ்யாவின் முடிவை விமர்சித்துள்ளனர் அத்துடன் பல இலட்சம் மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று எச்சரித்துள்ளன. (அ)

# சௌத் சகீல் இரட்டைச் சதம் பாகிஸ்தான் முன்னிலை!

காலி, ஜூலை 19

சௌத் சகீலின் அபாரமான இரட்டைச் சதத்தால் இலங்கை அணியை விட 135 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது பாகிஸ்தான் அணி.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. காலியில் நடக்கும் இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 312 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸில் பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்டம் முடிவின்போது 5 விக்கெட்கள் இழப்புக்கு 221 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சௌத் சகீல் 69, சல்மான் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது பாகிஸ்தான் அணி. சகீல், சல்மான் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். மேலதிகமாக 22 ஓட்டங்களை எடுத்த சல்மான் 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சகீல் நிலைத்து ஆடினார்.

அடுத்து வந்த நொமன் அலி 25 ஓட்டங்களைப் பெற்றார். இந்த நிலையில் சகீல் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். அடுத்து வந்த ஷா அப்ரிடி 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அபாரமாக ஆடிய சகீல் இரட்டை சதம் அடித்தார். அவர் 19 பௌண்ட்ரிகளுடன் 208 ஓட்டங்களைப் பெற்றார். 6ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய சகீலின் முதல் இரட்டைச் சதமாக இது அமைந்தது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது பாகிஸ்தான் அணி 121.2 ஓவர்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 461 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 3, ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்களை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும்.






# வொன்ட்ரூசோவா 10ஆவது இடத்தில்!

லண்டன், ஜூலை 19

உலக ரென்னிஸ் தரவரிசையில் செக் குடியரசின் வொன்ட்ரூசோவா 10ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

ரென்னிஸ் போட்டியில் சிறந்து விளங்கும் வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியலை உலக ரென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் மார்கெடா வொன்ட்ரூசோவா 42ஆவது இடத்தில் இருந்து முதன் முறையாக '10ஆம்' இடத்தை கைப்பற்றினார். இவர், அண்மையில் லண்டனில் நடந்த விம்பிள்டன் இறுதியாட்டத்தில் துனீசியாவின் ஒன்ஸ் ஜபீரை வீழ்த்தி முதன் முறையாக கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்றிருந்தார்.

கிரீசின் மரியா சக்காரி, 9ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். செக் குடியரசின் பெட்ரா கிவிட் டோடா 8ஆவது இடத்துக்கு முன்னேறினார். போலந்தின் ஸ்வியாரெக், பெலாரஸின் சபலென்கா, கஜகஸ்தானின் ரிபாகினா, அமெரிக்காவின் பெகுலா, பிரான்ஸின் கார்சியா, துனிசியாவின் ஜபீர், அமெரிக்காவின் கோகோ காப் முறையே முதல் 7 இடங்களை தக்கவைத்துக் கொண்டனர்.



# அல்காரஸ் முதலிடத்தில்!

லண்டன், ஜூலை 19

ரென்னிஸ் விளையாட்டில் ஆண்களுக்கான ஏ. ரி. பி. ஒற்றையர் தரவரிசையில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் முதல் இடத்தில் நீடிக்கிறார்.

இவர், சமீபத்தில் முடிந்த விம்பிள்டன் இறுதியாட்டத்தில் சேர்பியாவின் ஜொகோவிச்சை வீழ்த்தி முதன் முறையாக கிண்ணம் வென்றார்.

ஜொகோவிச் 2ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார். ரஷ்யாவின் மெத்வதேவ் 3ஆவது இடத்தில் தொடர்கிறார்.

# ஓரங்கட்டப்படுகின்றனர் ரோஹித், கோலி!

புதுடில்லி, ஜூலை 19

அயர்லாந்து 'இருபது-20' தொடருக்கான அணியில் கோலி, ரோஹித் இடம் பெறுவது சந்தேகம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட்டின் மூன்று வித அணிக்கும் ரோஹித் சர்மா தலைவராக உள்ளார். கடந்த 'இருபது-20' உலகக் கிண்ணத் தொடருக்குப் பின் ரோஹித் சர்மா, கோலி, ஒருநாள், டெஸ்ட் அணியில் மட்டும் சேர்க் கப்படுகின்றனர். அதிகார பூர்வமற்ற முறையில் ஹார்திக் பாண்ட்யா 'இருபது-20' அணியின் தலைவராக செயல்படுகிறார்.

வரும் மேற்கிந்தியத் தீவுகள் 'ரி-20' தொடரிலும் ரோஹித், கோலி என இருவரும் சேர்க்கப்படவில்லை. அடுத்து அயர் லாந்து செல்லும் இந்திய அணி, மூன்று போட்டி கொண்ட 'ரி-20' தொடரில் (ஓக. 18, 20, 23) பங்கேற்க உள்ளது. இதற்கான இந்திய அணி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

இதில் அணித் தலைவராக ஹார்திக் பாண்ட்யா மீண்டும் தொடர உள்ளார். மூத்த வீரர்கள் இருவரையும்




அயர்லாந்து தொடரிலும் புறக்கணிக்க அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. தவிர டிராவிட்டுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு அயர்லாந்து செல்லும் அணிக்கு பயிற்றுநராக லட்சுமண் நியமிக்கப்பட உள்ளார். (ஐ)

# 106 மீற்றர் தூரத்துக்கு சிக்ஸர் அடித்த பிராவோ

நியூயோர்க், ஜூலை 19

எம். எல். சி. போட்டியில் பிராவோ 106 மீற்றர் தூரம் சிக்ஸர் அடித்து அசத்தினார்.

எம். எல். சி. எனப்படும் மேஜர் லீக் கிரிக்கெட் போட்டி அமெரிக்காவில் ஜூலை 13 முதல் நடைபெற்று வருகிறது.

ஐ. பி. எல். அணிகளும் 3 அணிகளை விலைக்கு வாங்கி விளையாடுகிறது. இதில் சென்னை, மும்பை, கொல்கத்தா அணிகள் முறையே டி. எஸ். கே. (டெக்ஸாஸ் சுப்பர் கிங்ஸ்), எம். ஐ. என். வை. (மும்பை இந்தியன்ஸ் நியூ யோர்க்), எல். ஏ. கே. ஆர். (லொஸ் ஏஞ்சல்ஸ் நைற் ரைடர்ஸ்) ஆகிய அணிகள் விளையாடுகின்றன.

மேலும் அமெரிக்காவை சேர்ந்த 3 அணிகளுமாக மொத்தம் 6 அணிகள் விளையாடுகின்றன. இதில் டி. எஸ். கே. அணிக்காக சென்னை சுப்பர் கிங்ஸின் முன்னாள் வீரர் டுவைன் பிராவோ விளையாடுகிறார்.

முதல் போட்டியில் அபாரமாக வென்ற டி. எஸ். கே. தனது 2ஆவது போட்டியில் வாஷிங்டன் ப்ரிடம் அணியிடம் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தேல்வியுற்றது.

இந்தப் போட்டியில் டி. எஸ். கே. தோல்வியுற்றாலும் பிராவோ அற்புதமாக விளையாடினார். இதில் 39 பந்துகளுக்கு 76 ஓட்டங்கள் அடித்து விளாசினார். அதிலும் நோர்ட்ஜே ஓவரில் 10 பந்துகளில் 35 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

17.2 ஓவரில் நோர்க்யா வீசிய பந்தில் 106 மீ. தூரம் சிக்ஸரும் அடித்து அசத்தினார்.



# டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி வேட்பாளர்

## சுதந்திர மக்கள் பேரவை தீர்மானம்

கொழும்பு, ஜுலை 19

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திர மக்கள் பேரவையின் ஜனாதிபதி வேட்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை முன்னிறுத்த பேரவை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

அதன்படி, சுதந்திர மக்கள் பேரவை தனக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளவர்களுடன் கூட்டணி அமைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்கு தயார் என பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஊழலற்றவர், அவர் நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை வகிக்க மிகவும் பொருத்தமானவர் எனவும், எனவே அவரை நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்க எதிர்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு சுதந்திர மக்கள் பேரவை மிகவும் வெற்றிகரமான வேலைத்திட்டத்தை கட்டியெழுப்பியுள்ளதாகவும்,



அதற்கேற்ப நாட்டில் ஊழல் மோசடிகளை தடுக்கும் வகையில் அரசியலமைப்பை மாற்ற தயாராகவுள்ளதாகவும் லலித் எல்லாவல எம்.பி தெரிவித்தார்.

(அ)

# கோப்பாய் கலாசாலையில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம்





யாழ்ப்பாணம், ஜுலை 19

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நுண்கலை மன்றம் நடத்திய ஆடிப்பிறப்பு விழா நேற்று முன் தினம் திங்கள்கிழமை ஆடிப்பிறப்பு நாளன்று பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஆறுமுகம் இரகுநாதன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக சியன தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும் எமது கலாசாலையின் பழைய மாணவருமான துணவியூர் சி. கேசவன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் தொடக்க உரையினை நுண்கலை மன்றக் காப்பாளர் செல்வி ரஜிதா சின்னதுரை ஆற்றினார்.

அதிதி அறிமுக உரையினை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் நிகழ்த்தினார்.

ஆடிப் பிறப்பு பற்றிய மாணவர் உரையினை தமிழ் நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணன் ரொபேர்ட் தேவசகாயம் சுரேஷ் ஆற்றினார்.

இந்நிகழ்ச்சிகளை மாணவர் மன்றத் தலைவர் சுப்பிரமணியம் தனசீலன் தொகுத்தளித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டவருக்கும் பாரம்பரிய முறையில் சிரட்டைகளில் பலாவிலை களினால் கோலி குடிக்கக்கூடிய வகையில் ஆடிக்கூழ் வழங்கப் பட்டது.

(அ)

# சிவசிதம்பரம் நூற்றாண்டு விழா நாளை மாலை வடமராட்சியில்

யாழ்ப்பாணம், ஜுலை 19

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் பிறந்த நூற்றாண்டு நினைவு விழா நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு வடமராட்சி கரவெட்டி சம்பந்தர் கடையடி மகேசன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கு. மிகுந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வீ.ரி. தமிழ்மாறன், யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, தினக்குரல் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், சிவசிதம்பரத்தின் மகள் திருமதி நிராஞ்சலி தேவராஜ் ஆகியோர் உரையாற்றுவர்.

தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விழாவில் கௌரவிக்கப்படுவார்.

அமரர் சிவசிதம்பரத்தின் அரசியல் வாழ்வு ஆவண நூலொன்றும் வெளியிடப்படும். கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

(அ-2)

# நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறை யாழில்

யாழ்ப்பாணம், ஜுலை 19

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 22ஆம் , 23ஆம் திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணி வரை இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைதூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளைமறுதினம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

மேலதிக விபரங்களுக்கு: திருமறைக் கலாமன்ற அலுவலகம் 021 222 2393,077 6393620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

(அ)

# கிளிநொச்சி கடை ஒன்றில் தீப்பரவல்!



கிளிநொச்சி, ஜுலை 19

கிளிநொச்சி வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் அங்கிருந்த பல பொருட்கள் எரிந்து தீக்கிரையாகியுள்ளன.

இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் தீ விபத்து பாதுகாப்புப் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீ விபத்து கட்டுபாட்டுப் பிரிவினர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கிளிநொச்சி டிப்போ வீதியில் அமைந்துள்ள பிரபல தனியார் பல்பொருள் விற்பனை நிலையத்தின் களஞ்சிய பகுதியிலேயே குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் ஏற்பட்ட முழுமையான சேத விவரம் தொடர்பில் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

மேலும், தீ விபத்துக்கான காரணம் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது.

(அ)

# களனிப் பாலத்தில் ஆணி திருட்டு; பாராளுமன்றத்தின் கவனத்துக்கு

கொழும்பு, ஜுலை 19

களனிப் பாலத்தில் 28 கோடி ரூபாய் பெறுமதியான ஆணிகள் திருடப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் நாட்டில் பேசு பொருளாக மாறியுள்ள நிலையில், இது தொடர்பாக நேற்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், இந்த விவகாரத்தின் உண்மைத் தன்மையை அமைச்சர் பந்துல குணவர்த்தன சபைக்கு அறிவிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021, நவம்பர் 27 ஆம் திகதியன்று புதிய களனிப் பாலம் திறக்கப்பட்டது. இன்றுடன் இது திறக்கப்பட்டு 599 நாட்கள் ஆகின்றன.

ஆனால், இங்கிருந்து 28 கோடி ரூபாய் பெறுமதியான ஆணிகள் திருடப்பட்டுள்ளதாக இம்மாதம் தகவல் ஒன்று வெளிவந்துள்ளது.

அதாவது, 8 இலட்சத்து 75 ஆயிரத்து 866 டொலர் பெறுமதியான ஆணிகள்தான் இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

28 கோடி ரூபாய் பெறுமதியான ஆணிகள் என்றால், 77 இலட்சத்து 92 ஆயிரத்து 402 கிலோ இரும்புகள் இங்கு களவாடப்பட்டுள்ளமை தெரியவருகிறது.

ஒரு ஆணியின் நிறையானது 5 கிலோ என எடுத்துக்கொண்டால், 15 இலட்சத்து 58 ஆயிரத்து 480 ஆணிகள், 599 நாட்களில் இங்கிருந்து கழற்றப்பட்டுள்ளன.

ஒரு நாளைக்கு 100 ஆணிகள் வீதம் திருடப்பட்டிருந்தால், 21 வருடங்களேனும் தேவை இவ்வளவு ஆணிகளை கழற்றுவதற்கு.

ஆனால், 599 நாட்களில் இவ்வளவு ஆணிகள் கழற்றப்பட்டிருக்குமானால், ஒரு நாளைக்கு 1300 ஆணிகளை கழற்றியிருக்கவேண்டும்.

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை கழற்றினால்கூட, 10 ஆணிகளைத்தான் இங்கிருந்து கழற்ற முடியும்.

எனவே, இந்த விடயத்தின் உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்.

உண்மையில் இங்கு ஆணிகள் கழற்றப்பட்டுள்ளனவா? அல்லது ஆணிகள் பொருத்தப்படவில்லையா என்பதை அமைச்சர் சபைக்கு கூற வேண்டும்-என்றார்.

(அ)

## டலஸே...

பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்துள்ளார்.

டலஸ் அழகப்பெரும நாட்டின் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவி வகிக்கத் தகுதியான ஊழல், மோசடிகளில் சம்பந்தப்படாத நபர் எனவும் இதனால், அவரை நாட்டின் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்ய எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## 13ஐ...

இந்தியாவுக்கு நாளை வியாழக்கிழமை உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பயணத்துக்கு முன்னதாக தமிழ்த் தேசிய கட்சிகளை பேச்சுக்கு அழைத்தார். நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கட்டட வளாகத்தில் இந்தப் பேச்சு நடந்தது.

பேச்சின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் கொண்டு வந்த சில தயார்படுத்தல்களான மனித உரிமைகள் விவகாரம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பான விடயங்களை விவரித்தார்.

சம்பந்தனின் எதிர்ப்பை தொடர்ந்து அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயத்துக்கு கலந்துரையாடல் மாறியது.

இந்தப் பேச்சின்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. அதற்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் ஆதரவும் தேவை என்று ஜனாதிபதி கூறினார். அத்துடன், பொலிஸ் அதிகாரம் இல்லாத 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். அத்துடன், சில விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே இருக்கும் - இந்த விடயங்கள் தொடர்பில் சட்டரீதியாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தரப்பு தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்கவே நான் விரும்புகிறேன். அவர்களால் அரசியல் ஆதாயங்களைப் பெறுவது எனது நோக்கமல்ல. வடக்கு, கிழக்கு மக்களுக்கு நான் ஒருபோதும் அநீதி இழைக்கப் போவதில்லை. அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டுமாயின் கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பாராளுமன்றத்தின் முழுமையான ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டும்- என்றும் இதன்போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதனிடையே, 13ஆம் திருத்தம் குறித்த ஜனாதிபதியின் இந்த முடிவை தாம் ஏற்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

13ஆம் திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களே போதாத நிலையில் 13 மைனஸ் அதிகாரங்களை ஒருபோதும் நாம் ஏற்கப்போவதில்லை என்று இலங்கை தமிழரசு கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம். பி. தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன், சி. வி. விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சி. சிறீதரன், த. சித்தார்த்தன், சாணக்கியன் இராசமாணிக்கம், தவராசா கலையரசன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோருடன் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டார்.

ஜனாதிபதி தரப்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க, விஜயதாஸ ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், ச. வியாழேந்திரன், சி. சந்திரகாந்தன் மற்றும் கே. திலீபன் எம். பி. ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## கோதுமை...

இதனை அறிவித்துள்ளன.

நேற்று செவ்வாய்க்கிழமை முதல் இந்த விலை குறைப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. (ஐ)

## பொலிஸ்...

விக்கிரமசிங்க த. சித்தார்த்தன் எம். பியிடம் உறுதியளித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை குருந்தூர் மலையில் தமிழரின் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டது. அங்கு பொங்கலிட்டு வழிபட குருந்தூர்மலை விகாரை பிக்குவும் கும்பல் ஒன்றும் தடை ஏற்படுத்தியது. நீதிமன்ற தீர்ப்பை மீறும் வகையில் அமைந்த இவர்களின் செயலுக்கு பொலிஸார் துணைநின்றிருந்தனர். முல்லைத்தீவு மாவட்ட மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் கண் காணிப்பின் கீழேயே இது முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் த. சித்தார்த்தன் எம். பி. நேற்று ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதன்போதே இந்த விடயம் குறித்து முறைப்பாட்டை முழுமையாக தருமாறும் அந்த பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார். (ஐ)

## பேச...

எங்களுடன் பேசுங்கள்...” என்று சம்பந்தன் தனது சீற்றத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சம்பந்தன் கடும் தொனியில் கூறிய இந்த வார்த்தைகளால் சினமுற்ற ஜனாதிபதி “பேச விரும்பினால் மட்டும் என்னுடன் பேசுங்கள். இல்லையேல் நீங்கள் எழுந்து செல்லலாம்”, என்று கூறினார்.

தொடர்ந்து, “என்னால் தரக்கூடியவற்றையே தர முடியும். 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதானால் பாராளுமன்றில் 3இல் 2 பெரும்பான்மை அவசியம். அதனை செய்ய எம்மால் முடியாது”, என்றும் அவர் கோபமாகவே பதிலளித்தார். (ஐ)

## எங்களை...

கோபத்தை வெளிப்படுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வு குறித்து பேசவில்லை. மாறாக தாம் தயார்ப்படுத்திக் கொண்டுவந்த மனித உரிமைகள் சார் விடயம், காணாமல் போனோர் பணிமனை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாகவே விளக்கமளித்தார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசப்படாத நிலையில், சினமுற்ற இரா. சம்பந்தன் எம். பி., “எங்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள். அதிகாரப் பகிர்வு குறித்து முதலில் எங்களுடன் பேசுங்கள்...” என்று தெரிவித்தார்.

இதன் பின்னரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13இன் நடைமுறை குறித்துப் பேசினார். (ஐ)

## பெற்றோல்...

மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

முன்னதாக, வீட்டுக்குள் புகுந்த குழு யன்னல்கள், கதவுகளுடன் அங்கிருந்த பொருட்களையும் அடித்து நொருக்கியது. இதன் பின்னரே பெற்றோல் குண்டை வீசி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

இதில், அந்த வீட்டில் இருந்த 3 பிள்ளைகளின் தாயார் படுகாயமடைந்தார். அவர் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துங்கள் இல்லையேல் வேட்புமனுவை இரத்தாக்குங்கள்

## விமல் வீரவன்ஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 19



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துங்கள் இல்லையேல் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்து பாதிக்கப்பட்டுள்ள அரச சேவையாளர்களுக்கு நியாயம் வழங்குங்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இதன்போது, வேட்புமனு தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண விசேட கவனம் செலுத்தியுள்ளோம், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களுடன் கலந்துரையாடி உறுதியான தீர்மானம் எடுக்கப்படும் என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போதே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுத்தாக்கல் செய்ய அரச சேவையாளர்கள் அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடுவதற்கு 533 அரச சேவையாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்தார்கள். இதேபோல் ஏனைய அரசியல் கட்சிகள் சார்பிலும் பல அரச சேவையாளர்கள் போட்டியிட தயாராக இருந்தார்கள்.

வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச சேவையாளர்களுக்கு சம்பளமில்லாத விடுமுறை வழங்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு பிற்போடப்பட்டதை தொடர்ந்து கடந்த மார்ச் 9 ஆம் திகதி முதல் ஏப்ரல் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியை வரையறுத்து அடிப்படை சம்பளம் மாத்திரம் வழங்கப்பட்டது. ஒருசிலருக்கு அடிப்படை சம்பளம் கூட வழங்கப்படவில்லை. தேர்தல் இழுபறி நிலையில் உள்ள பின்னணியில் வேட்பு மனு தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் பல நெருக் கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். பிரச்னைகளுக்கு தீர்வு கண்டுவிட்டோம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால், நடைமுறையில் எதிர்மறையான நிலைமையே காணப்படுகிறது. ஆகவே ஒரு சுற்றறிக்கை ஊடாக பிரச்னைக்கு தீர்வு காணுங்கள் என ஆளும் தரப்பிடம் வலியுறுத்தினார்.

இதன்போதுகருத்து தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச ஆசிரியர்களுக்கு தூர பிரதேசங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பொருத்தமற்ற பிரதேசங்கள் மற்றும் பாடத்திட்டங்களை கற்பிக்க பணிக்கப்பட்டுள்ளதால் ஆசிரியர்கள் சேவைக்கு சமுகமளிக்காமல் உள்ளார்கள். இதனால் பாடசாலை மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே பிரச்னைக்கு தீர்வு வழங்கிவிட்டோம் என பேச்சளவில் குறிப்பிட்டுக் கொண்டிருக்காமல் செயலில் செயல்படுத்துங்கள் - என்றார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு எப்போது இடம்பெறும் என்பது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. ஒன்று தேர்தலை நடத்த வேண்டும் அல்லது தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்து செய்து அரச சேவையாளர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும் - என்றார்.

## இந்தியா...

எரிபொருள் விநியோக ஒப்பந்தத்தை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

## யாழ்.பல்கலை...

இதன்போது, 1,885 உள்வாரி மாணவர்கள், 166 வெளிவாரி மாணவர்கள் 162 பட்டப்பின் தகைமை பெற்றவர்கள், 65 உயர் தகைமை பெற்றவர்களுக்கு பட்டங்கள் - சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ இணையம், யூ-ரியூப், முகநூல் ஊடாக நேரலையாக ஒளிபரப்பாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு 50ஆவது ஆண்டில் - பொன்விழா ஆண்டில் இந்த பட்டமளிப்பு நிகழ்வு நடைபெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை போக்குவரத்து தொடர்பான அசௌ கரியங்களை தவிர்க்கும் பொருட்டு காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை திருநெல்வேலி சந்தியிலிருந்து கொக்குவில் சந்தியை நோக்கிய ஆடியபாதம் வீதியின் புகையிரத கடவை வரையான பாதை, கலட்டி சந்தியிலிருந்து இராமநாதன் வீதி பரமேஸ்வரா சந்தி வரையான பாதை ஆகியன ஒருவழிப்பாதையாகப் பேணப்படும் என்று நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (ஐ)

## அரசியல்...

செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு உதவினர் என்ற குற்றச் சாட்டில் செல்லையா நவரட்ணத்துக்கு 200 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதேபோன்று வெடிப் பொருள்களுடன் கைதான சண்முகரட்ணம் சண்முகராஜனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

விடயத்தைத் தெரிவித்தார். கலந்துரையாடியிருந்தார்.

புதிய பயங்கரவாத சட்டம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஜனாதிபதி தமிழ் கட்சிகளிடம் வலியுறுத்தினார். அத்துடன், திருத்தங்கள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுத்த பின்னர் சட்டமூலம் மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய முன்மொழிவுகளை வரைவுக் குழு இன்று (நேற்று) மதிப்பாய்வு செய்ய உள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போதுசுட்டிக்காட்டினார். இதுதவிர, ஊழல் ஒழிப்புச் சட்டம், நாளை (இன்று)பாராளுமன்றக் குழுநிலை யில் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படும் என்றும், உயர் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களும் பரிசீலிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# எங்கள் கட்சியினர் மீது கை வைத்தால் வட்டியுடன் இழப்பீடு செலுத்த நேரிடும்!

## எச்சரிக்கிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜுலை 19

**எதிர்காலத்தில் எமது கட்சியினர் மீது கை வைத்து, தொந்தரவு களை செய்தால், கட்டாயம் வட்டியுடன் இழப்பீட்டை செலுத்த நேரிடும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் மினு வங்கொடை தொகுதி அதிகார சபைக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி சவால்களையும் சிக்கல் களையும் எதிர்கொண்டு கட்சியை எப்படி வெற்றிகரமாக முன்னெடுத் துச் செல்லலாம் என்று சிந்தித் தோம்.

எனது தந்தையான ரெஜி ரண துங்கவின் வீடும் கடந்த 1977 ஆம் ஆண்டு தீ வைக்கப்பட்டது. இதன் பின்னர் அவர் நடத்திய முதல் கூட் டத்திற்கு 13 பேர் மட்டுமே வந்த னர்.

எனினும் அவர் வலுவான அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

கடந்த ஆண்டு மே மாதம் போராட்டம் என்று கூறி போதை பித்தர்கள் நடத்திய போராட்டம் மிக திட்டமிட்ட வகையில் மேற் கொள்ளப்பட்டது.

அதிகளவான சேதங்கள் கம் பஹா மாவட்டத்திலேயே ஏற்பட் டன. எமது தொகுதியில் 13 வீடு கள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

போராட்டத்தின் பின்னர் நான் மீண்டும் மினுவங்கொடைக்கு வந்து, தீயிடப்பட்ட அலுவ லகத்தை நிர்மாணித்து பணிகளை ஆரம்பித்தேன். வீடுகளை எரித்து, கொலைகளை செய்து எம்மை வீழ்த்த முடியாது.

1977 ஆம் ஆண்டு வீடுகளுக்கு தீயிட்டனர். 1994 ஆம் ஆண்டு எதிர்க்கட்சியினரின் வீடுகளை தீயிட நாங்கள் இடமளிக்கவில்லை.

ஆனால் இனிவரும் காலங்களில் எமது கட்சியினர் மீது கை வைத் தால், வட்டியுடன் இழப்பீட்டை செலுத்த நேரிடும்.

நாங்களும் தற்போது விளை யாட்டில் குதித்துள்ளோம் - என் றார். (அ)



# யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு விஜயம் செய்த கனேடிய தூதுவர்

யாழ்ப்பாணம், ஜுலை 19

இலங்கைக்கான கனேடிய தூதுவர் நேற்று யாழ்ப்பா ணம் பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார்.

இதன்போது நூலகத்தில் யாழ். மாநகர ஆணையா ளர் இ.த.ஜெயசீலன் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ் தானிகர் எரிக் வோல்ஸை வரவேற்று கலந்துரையாடி னார்.

இந்த சந்திப்பில் யாழ்.பொது நூலக நூலகர் உள் ளிட்ட சில உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தாமரை பறிக்கச் சென்றவர் குளத்தில் விழுந்து உயிரிழப்பு

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜுலை 19

முல்லைத்தீவு தாமரைக்குளம் ஏரியில் தாமரை பறிக்க படகில் பயணித்த இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரும் படகில் பயணித்தபோது படகில் இருந்த துவாரத்தில் இருந்து நீர் கசிந்து படகு மூழ்கிய தாக பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவர் தெற்கு முல்லைத்தீவைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஆவார்.

சடலம் மாஞ்சோலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர் பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாடசாலை முதலாம் தவணை 21ஆம் திகதி நிறைவடைகிறது!

கொழும்பு, ஜுலை 19

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணை ஜுலை 21ஆம் திகதியுடன் நிறைவடைவதாக கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஜுலை 24ஆம் திகதி தொடங்கும் என்றும் அறிவிப்பில் கூறப் பட்டுள்ளது. (அ)

# இளம் குடும்பப் பெண் காய்ச்சலால் மரணம்!

## திருமணமாகி 4 மாதங்களில் துயரம்!

யாழ்ப்பாணம், ஜுலை 19

திருமணமாகி நான்கு மாதங்களேயான நிலையில் காய்ச்சல் காரணமாக இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளை, கொல்லன்கலட்டியைச் சேர்ந்த சுகிர்தராசா நிதர்சினி (வயது-27) என்பவரே உயிரி ழந்துள்ளார்.

மூன்று நாள் காய்ச்சலால் அவர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று திடீரென வலிப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை வலிகாமம் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிலங்கம் மேற் கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# ஏ-9 வீதியில் மரக் கன்றுகளுக்கு தீ வைத்து எரித்தனர் விசமிகள்!

வடமராட்சி, ஜுலை19

ஏ-9 நெடுஞ்சாலை, ஆனையிறவுப் பகுதியில் நாட் டப்பட்டிருந்த மரக் கன்றுகளுக்கு விசமிகள் தீ வைத் ததில் அவை தீயில் கருகியுள்ளன.

தன்னார்வ அமைப்பொன்றினால் வீதியின் இரு மருங்கிலும் நடப்பட்டு பராமரிப்புச் செய்யப்பட்டு வந்த மரக்கன்றுகளில் 28 மரக்கன்றுகளுக்கே இனந் தெரியாத நபர்கள் இவ்வாறு தீ வைத்து அழித்துள்ளனர்.

இயற்கை வளங்கள் அழிவுற்று வரும் நிலையில் மனிதர்களுக்கு பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு வரு கின்றன. அந்த நோய்த்தாக்கங்களில் இருந்து மனிதர் களை பாதுகாப்பதில் மரங்கள் அளப்பரிய பங்காற்று கின்றன.

மரங்கள் நாட்டப்படவேண்டும் என பல்வேறு தரப்பினரும் கூறி, அதனை ஊக்குவித்து வருகின்ற நிலையில், இவ்வாறான ஒரு செயற்பாடானது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-02)

# பல்கலை மாணவி சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜுலை 19

பல்கலைக்கழக மாணவி ஒருவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரம்-கெக்கிராவை பிரதேசத்திலுள்ள தனது வீட்டிலிருந்தே குறித்த மாணவி நேற்று முன் தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ருகுணு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 23 வயதுடைய எஸ்.ஆர்.சுசந்திகா என்ற மாணவியே தூக் கில் தொங்கியவாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலி ஸார், மாணவியின் பெற்றோரிடம் வாக்குமூலத்தைப் பெற்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பதிவு செய்யப்படாத மருந்துகள் நாட்டில்!

கொழும்பு, ஜுலை 19

பதிவு செய்யப்படாத மருந்துகள் இலங்கை முழு வதும் விநியோகிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தி யின் களுத்துறை மாவட்ட உறுப்பினர் ராஜித சேனா ரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை நிறுத்த முடியாது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போது இதனை நிறுத்தினாலும் எமக்கு விரை வாக மருந்து எங்கே கிடைக்கும்? எதிர்வரும் மூன்று மாதங்கள் இதை விட ஆபத்தானவை - என்றார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிக்கையில் இது இலவச சுகாதாரம் பற்றி மக்களை பயமுறுத்து வதாகும்.

இலவச மருத்துவம் என்பது கேலிக்கூத்தாக மாற்றப் படுகிறது. அதற்கு இடமளிக்கமாட்டோம்.- என்றார்.

# கட்டணம் செலுத்தாததால் வைத்தியசாலை இருளில்!

கொழும்பு, ஜுலை 19

பதவியா வைத்தியசாலையின் மின் கட்டணத்தைச் செலுத்தாத காரணத்தினால் வைத்தியசாலைக்கான மின் சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் இல்லாததால் உள்நோயாளிகள், வெளி நோயாளிகள், சுகாதார அலுவலர்கள் உள்ளிட்டோர் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ரூ.74,000 மின்கட்டணத்தைச் செலுத்தாததால் மருத் துவமனையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# யாழில் நெருப்பினால் சூடு வைத்து சித்திரவதை செய்யப்பட்ட சிறுவன்!

யாழ்ப்பாணம், ஜுலை 19

நெருப்பால் சூடு வைத்து சித்திரவதை செய்யப்பட்ட 12 வயதுச் சிறுவன் ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனே இவ்வாறு சித்திரவதை செய்யப்பட் டுள்ளார்.

சிறுவனின் தந்தை நெருப்பால் சுட்டதில் சிறுவ னுக்குக் காயம் ஏற்பட்டுள்ளது.

கை, முகம் எனப் பல இடங்களிலும் காயங்கள் காணப்படுவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித் தன.

இவ்வாறு தீக்காயத்துக்கு உள்ளான சிறுவன் புண்ணு டன் நேற்று முன்தினம் பாடசாலைக்குச் சென்றபோது அதனை அவதானித்த ஆசிரியர்கள் அவனை வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுவனிடம் வாக்குமூலம் பெற்று சட்ட நடவடிக்கைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

விசாரணையின்போது தனது கணவரைப் பாது காக்கும் நோக்கில் தானே மகனுக்குச் சூடு வைத்ததாக குறித்த சிறுவனின் தாயார் தெரிவித்துள்ளதாகக் கூறப் படுகிறது. (அ)

# மாணவர் குழுக்கள் மோதல்; மூடப்பட்ட பல்கலைக்கழகம்

கொழும்பு, ஜுலை 19

இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக ஊவா வெல்லஸ பல்கலைக் கழகத்தை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறிய நிலையில் பல்கலைக்கழகத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள் ளனர்.

அமைதியின்மை சீராகும் வரை பல்கலைக்கழகத்தை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.